அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்

# அறபுத் தமிழ்
# எங்கள் அன்புத் தமிழ்

(விரிவாக்கிய பதிப்பு)

எ.எம்.எ. அஸீஸ்

பதிப்பாசிரியர்கள்
எஸ்.எச்.எம். ஜெமீல்
எம். அலி அஸீஸ்

கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் மன்றம்
கொழும்பு
*2012*

*அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்*
*எ.எம்.எ. அஸீஸ் எழுதியது - 1973*

*விரிவாக்கிய மீள்பதிப்பு - 2012 அக்டோபர் 4*
*39ஆவது அஸீஸ் நினைவு தினம்*

© *1973*

*இணை வெளியீடு*
*கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் மன்றம்*
47/2A, *பிரெட்ரிகா வீதி கொழும்பு - 6*
*தொ.பே: 0112598949, மி.அஞ்சல்:* www.azeezfoundation. com
*மற்றும்*
*குமரன் புத்தக இல்லம்*
*39, 36வது ஒழுங்கை, கொழும்பு 06, தொ.பே.: 011 2364550, மி. அஞ்சல்:* kumbhlk @gmail.com

*குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*இல. 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6*

Arabu Thamil Enkal Anpu Thamil
by A.M.A. Azeez ©
Revised by S.H.M. Jameel & M.Ali Azeez

First Edition-1973
Revised edition - 2012 October 4
39th Azeez Commemoration Day

Published Jointly by
Dr. A.M.A. Azeez Foundation
47/2A, Fredrica Road, Colombo - 06
Tel. - 0112598949, E.mail: www. azeezfoundation. com
and
Kumaran Book House
39, 36th Lane, Colombo 06, Tel.: 011 2364550, E-mail: kumbhlk@gmail.com

Printed by Kumaran Press (Pvt) Ltd.
No. 39, 36th Lane, Colombo -6

ISBN 978-955-659-356-3



கலாநிதி எ.எம்.எ. அஸீஸ்

# உள்ளடக்கம்


**முன்னுரை** 1

1. அறபுத் தமிழ் எங்கள் அன்புத்தமிழ் - 1 21

2. அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் - 2 32

3. அறபுத் தமிழ் ஆலிம் புலவர் 41

4. இன்றைய தேவைகள் 47

5. மொழிபெயர்ப்புக் கலை 50

6. ஸ்வாஹிலி மொழியும் அறபுத் தமிழும் 55

**இணைப்பு - புகழ்ப்பாவணி** 60




***1973* ஆம் ஆண்டு வெளிவந்த நூலின் அட்டைப் படம்**

# முன்னுரை

அறபுத் தமிழைப் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியவர் பேரறிஞர் கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் அவர்களாவார்.

1911 அக்டோபர் 04ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த அஸீஸ், 1973 நவம்பர் 24ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

தனது பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தி யாலயம்; மற்றும் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பெற்று பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் சித்தியடைந்தபோது, அங்கு செல்வதற்கான ஆகக் குறைந்த வயதெல்லையை எட்டியிருக்காத காரணத்தினால் உரிய வயதினை அடையும் வரை கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் சேர்ந்திருந்து அதன் பின்பே பல்கலைக்கழகம் சென்றார்.

பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றார். உயர்கல்வி பெறுவதற்கான புலமைப் பரிசில் பெற்று இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சென்.கதரின் கல்லூரியில் அனுமதி பெற்றார். ஆயினும் சி.சி.எஸ் பரீட்சையில் சித்தியடைந்ததன் காரணமாக, ஒரு தவணை முடிவில் நாடு திரும்பினார். இலங்கையில் அப்பரீட்சையிற் சித்தியடைந்த முதலாவது முஸ்லிம் இவரேயாவார்.

தனது வாழ்நாளில் 13 வருடங்களை அரச சேவையிலும், அதற்கடுத்த 13 வருடங்களை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அதிபராயும், அதற்கடுத்த 13 வருடங்களை பொதுச் சேவையிலும், இலக்கியப் பணியிலும் அவர் செலவிட்டார். அரசியலில் சில காலம் அக்கறை கொண்டு மூதவை உறுப்பின ராகவும் (செனட்டர்) கடமையாற்றினார் (1952-1963).

கொழும்பு ஸாஹிறா கல்லூரி அதிபராகச் சேவை; இலங்கை முஸ்லிம் கல்விச் சகாயநிதியம் ஆரம்பம்; அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை நிறுவியமை; முஸ்லிம் கலாசார நிலையம் தொடங்கியமை; இக்பால் சங்கம் ஸ்தாபிதம் என்பவை மூலம் அவரது சேவைக்களம் விரிந்தது.

1934ஆம் ஆண்டிலிருந்தே அவரது பெருந்தொகையான கட்டுரைகள் வெளிவந்தும், பேச்சுகள் நிகழ்த்தப்பட்டுமிருந்தாலும், 1960ஆம் ஆண்டின்

பின்னரே அவை நூலுருப் பெற ஆரம்பித்தன. அவரது ஆரம்ப காலப் பேச்சுக்கள், எழுத்துக்கள் யாவும் ஆங்கில மொழியிலேயே அமைந்தாலும், பிற்காலத்தில் பெரும்பாலான நூல்கள் தமிழ் மொழியிலேயே வெளிவந்தன. சமுதாயத்தில் மிகப் பெருந்தொகையானோர் தமிழ்மொழி மூலமான வெளியீடு களினாலேயே பயன்பெறுவர் எனக் கருதியே அவ்வாறு செய்தார்.

கால் நூற்றாண்டுக்கு மேல் ஸாஹிறாவின் அதிபராகக் கடமையாற்றிய ரி.பி.ஜாயா தனக்குப்பின் அக்கடமையைப் பொறுப்பேற்க அஸீஸைத் தேர்ந்தெடுத்தார். அதன் விளைவாய் 1948இலிருந்து 1961 வரை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராக அஸீஸ் கடமையாற்றி அளப்பரிய கல்விச் சேவையாற்றினார்.

இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியம் அவரது நிரந்தரப் பங்களிப் பாகும். பணவசதிக் குறைவினால் கல்வி வாய்ப்பைப் பெற முடியாத மாணவருக்கு உதவுவதற்காக 1945 ஏப்பிரல் 19ஆம் திகதி நிறுவப்பட்ட இந்நிதியம் இன்றுவரை சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றது. அதன் இன்றைய ஆக்கப் பணிகளுக்கு அவரது மூத்த மகன் அலி அஸீஸ் முக்கிய காரணமாயிருக்கிறார். இந்நிதியத்தின் தலைவராக எஸ்.எச்.எம்.ஜெமீல் பணியாற்றுகிறார்.

இவ்வாறான உதவித் தாபனம் ஒன்றினை நிறுவுவது பற்றி 1934இல் அவர் ஆற்றிய சொற்பொழிவொன்றில் அஸீஸ் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர், இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் கல்முனை அவசரகாலக் கச்சேரியில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய வேளையில் கல்முனை முஸ்லிம் கல்விச் சபையினை 1943இல் நிறுவி, அதன் மூலம் சகாய நிதியையும் ஆரம்பித்தார்.

இதுபற்றிக் கவிஞர் அ.லெ.அப்துல் காதர் லெப்பை ‘என் சரிதை’ எனும் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘‘இச்சங்கத்தின் இணைச்செயலாளராக சம்மாந்துறை டாக்டர் மீரா லெப்பை, காத்தான்குடி எம்.எம். முஹம்மத் (கல்முனை முஹம்மத் சன்ஸ் உரிமையாளர்) ஆகிய இருவரையும் தெரிவு செய்தோம். இச்சங்கத்தின் கூட்டம் பாணமையிலிருந்து காத்தான்குடி வரை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வன்னியமார் பிரிவிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்வாறு சங்கம் இயங்கிக் கொண்டிருக்கும்போதுதான், முஸ்லிம் கல்விச் சகாய நிதியை அங்குரார்ப்பணம் செய்வதற்காக ஜனாப்.எம்.எஸ். காரியப்பரின் சகலரான ஜனாப்.ஷரீப் விதானையின் வீட்டில் இராவிருந்துடன் ஒரு கூட் டத்தைக் கூட்டினோம். இக்கூட்டத்திற்கு ஜனாப்.எம்.எஸ். காரியப்பர் முதல் வேறு பலரும் சமூகம் அளித்திருந்தனர். கூட்டத்தின் நோக்கம் பற்றி ஜனாப்.

எ.எம்.எ. அஸீஸ் விளக்கினார். மற்றும் விரிவான விடயங்களைப் பற்றி என்னைப் பேசுமாறு ஜனாப்.எ.எம்.எ. அஸீஸ் அவர்கள் கூறினார்கள். அதற்கிணங்க முஸ்லிம் கல்விச் சகாயநிதியின் தேவைகளைப் பற்றி விளக்கிக் கூறினேன். அவற்றைக் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த சகலரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். அன்றே முஸ்லிம் கல்விச் சகாயநிதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (அப்துல் காதர் லெப்பை அ.லெ., என் சரிதை, தமிழ் மன்றம், கல்ஹின்னை, 1983 பக்: 36-37)

கொழும்புக்கு இடமாற்றலாகியதும் அக்கல்விச்சகாயநிதியத்தை அஸீஸ் நாடளாவிய ரீதியானதாக விஸ்தரித்தார். இவ்வாறு விஸ்தரிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் கல்விச்சகாயநிதியின் முதலாவது நன்கொடை கல்முனைச் சங்கத்தின் நிதிக் கையளிப்பாகும்..

1958 மார்ச் 18இல் முஸ்லிம் கலாசார நிலையத்தை ஸாஹிறாக் கல்லூரி வளாகத்தில் ஆரம்பித்தார்.

ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராயிருந்த வேளையில் ‘‘இக்பால் சங்கம்’’ ஆரம்பித்து அல்லாமா ஸேர் முஹம்மது இக்பாலின் தத்துவங்களை இலங்கையில் பிரபலமாக்கினார்.

தனது வாழ்நாளில் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள், அறபு நாடுகள், ஆபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், மலேசியா போன்ற நாடுகளில் பரந்த சுற்றுலாக்களை மேற்கொண்டார். அவற்றைப் பற்றி அவர் சேகரித்த குறிப்புகளே அவரது பிரயாண நூல்களின் கருப்பொருளாக அமைந்தன.

இத்தனை பணிகளுக்குமிடையில் ஆராய்ச்சித் துறையிலும், எழுத்துத் துறையிலும் அஸீஸ் மிக ஈடுபாடுடையவராகவிருந்தார். ஆரம்ப காலத்திலிருந்தே அவரிடம் ஒரு பழக்கம் இருந்தது. தனது சொற்பொழிவுகள் அனைத்தையும் பூரணமாக எழுத்தில் தயாரிப்பார். அவ்வாறு தயாரிக்கப்பட்டவைகளையும், கட்டுரைகளையும் தொகுத்து ரோனியோ செய்து பல பிரதிகளை நூலகங்களுக்கும், அவற்றில் ஈடுபட்டுள்ளோர்களுக்கும் விநியோகித்தார். இவ்வாறு அவரது 75 கட்டுரைகள், சொற்பொழிவுகள் மூன்று பாகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அக்கட்டுரைகள் சொற்பொழிவுகளின் பட்டியலைப் பின்வரும் நூலில் காணலாம். (எஸ்.எச்.எம்.ஜெமீல், எ.எம்.எ. அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனையும் பங்களிப்பும், கல்முனை ஸாஹிறா பழைய மாணவர் சங்கம், 1980, பக்: 87-93)

எனினும் அவரது உத்தியோக வாழ்க்கைக் காலத்தில் நூல் எதுவும் வெளிவரவில்லை. ஓய்வு பெற்ற பின்னர் 1963இலிருந்து அவரது இறப்பு வரை அடுக்கடுக்காகப் பல நூல்கள் வெளிவந்தன. அவையாவன:

1. இலங்கையில் இஸ்லாம்
யாழ்ப்பாணம்/கலைவாணி புத்தக நிலையம்
1963 ஜூன்
பக்: 224 ரூபா: 3.00
இந்நூலுக்கு அரச சாகித்திய விருது கிடைத்தது.

2. THE WEST REAPPRAISED
மஹரகம/சமன் பப்ளிஷர்ஸ்
1964 மே 10
பக்:174 ரூபா 5/50

3. மொழிபெயர்ப்புக் கலை
கொழும்பு / இளம்பிறை
1965 செப்டம்பர் 30
பக்: 8 15சதம்

4. மிஸ்றின் வசியம்
யாழ்ப்பாணம்/கலைவாணி புத்தக நிலையம்
1967 ஏப்பிரல்
பக்: 197 3ரூபா

5. கிழக்காபிரிக்கக் காட்சிகள்
சென்னை/பாரி நிலையம்
1967 டிசம்பர்
பக்: 203 5ரூபா

6. தமிழ் யாத்திரை
யாழ்ப்பாணம்/கலைவாணி புத்தக நிலையம்
1968 ஜனவரி 03
பக்: 198 3.75 சதம்

7. ஆபிரிக்க அனுபவங்கள்
சென்னை/திரீயெம் பப்ளிஷர்ஸ்
1969 டிசம்பர்
பக்:230 3.50 சதம்

8. அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்
கொழும்பு / டயமன்ட் பிரிண்டர்ஸ்
1973
பக்:38

## 2

கலாநிதி அஸீஸின் மரணத்தின் பின்னர் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் முயற்சியினால் 'ஹாஜி எ.எம்.எ.அஸீஸ் ஞாபகார்த்தக் குழு' 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் மாவட்ட நீதிபதி எம்.ஏ.எம் ஹுஸைன் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். முதலாவது அஸீஸ் ஞாபகார்த்தப் பேருரை 1976 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி பாகிஸ்தானைச் சேர்ந்த நீதியரசர் கலாநிதி ஏ.கே. புரோஹி அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. இக் கூட்டமானது அப்போது கல்வி அமைச்சராகவிருந்த அல்ஹாஜ் பதீயுத்தீன் மஹ்மூத் அவர்களின் தலைமையில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அன்றிலிருந்து இக்குழுவானது வை.எம்.எம்.ஏ. யுடன் இணைந்து வருடந்தோறும் பிரபலமானவர்களைக் கொண்டு ஞாபகார்த்தப் பேருரைகளை நடாத்தி வந்தது. வானொலி உரைகள், பத்திரிகைக் கட்டுரைகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்குழுவின் செயற்பாட்டினை விரிவாக்க வேண்டுமென அல்ஹாஜ் அஸீஸின் பழைய மாணவர்களிடமிருந்தும் நலன் விரும்பிகளிடமிருந்தும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதன் விளைவாக, 1990ஆம் ஆண்டு ஜுலை 24ஆம் திகதி ஜனாப் எம்.ஏ.எம். ஹுஸைன் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இச்சங்கத்தின் பெயர் 'கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் மன்றம்' என மாற்றம் செய்யப்பட்டு, ஜனாப். ஹுஸைன் தலைவராகவும் ஜனாப். எஸ்.எம். கமால்தீன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜனாப். ஹுஸைன் அவர்கள் கொழும்பிலிருந்து தனது சொந்த ஊரான கல்முனைக்குக் குடிபெயர்ந்ததுடன் மன்றத்தின் செயற்பாடுகள் குறையத் தொடங்கின. 1994 இல் நடைபெற்ற மன்றத்தின் கூட்டத்தில் பேராசிரியர் எம்.ரீ.ஏ புர்கான் தலைவராகவும், ஜனாப். ஏ.எம்.நஹியா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆண்டு விழாக்கள், வருடந்தோறும் பிரபல்யமானவர்களின் உரைகள், பத்திரிகை ஆக்கங்கள், வானொலி உரைகள் என்பவற்றுடன் நிகழ்வுகள் தொடர்ந்தன. சிறிது காலத்தின் பின்னர், மன்றத்துக்கான நிதி சேகரிப்புக்காக றமழான் காலங்களில் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு, அவ்வாறு சேரும் பணத்தைக் கொண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

2007ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் பேராசிரியர் புர்கான் தலைமைப் பதவியிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரிய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு புதிய தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டார். கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் மன்றத்தின் தற்போதைய நிர்வாகக் குழு வருமாறு:

| | | |
|---|---|---|
| எஸ்.எச்.எம். ஜெமீல் | - | தலைவர் |
| எம் காலித் பாறுக் | - | கௌரவ செயலாளர் |
| எம்.அலி அஸீஸ் | - | பொருளாளர் |
| தேசமான்ய எம்.ரி.ஏ. புர்கான் | - | உறுப்பினர் |
| பி. பாலசிங்கம் | - | உறுப்பினர் |
| எம்.எஸ்.றஹீம் | - | உறுப்பினர் |
| மருதூர் ஏ மஜீத் | - | உறுப்பினர் |
| கே.என்.டீன் | - | உறுப்பினர் |

நீண்ட காலமாக இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தின் நிர்வாகக் செயலாளராகக் கடமையாற்றும் எஸ்.எம்.யூஸுப், இம்மன்றத்தின் நிர்வாகச் செயலாளராகவும் பணிபுரிகிறார்.

''கலாநிதி அஸீஸ் அவர்களின் உரைகள், எழுத்துக்கள் மற்றும் கல்வி, இலக்கியம், அரசியல் சார்ந்த அவரது பங்களிப்புக்கள் என்பவற்றை வருடந் தோறும் நூலாக வெளியிட வேண்டுமென்ற எண்ணம் ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்தது. கல்வி மற்றும் அறிவுலகத்திற்கும், தேசிய சர்வதேச ரீதியிலான பொதுவான வாசிப்பாளர்களுக்கும் இவை பாரிய நன்மை பயக்கக் கூடியதாக அமையும். 1989ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட முயற்சி முழுதாக வெற்றி பெறவில்லை.

2007ஆம் ஆண்டின் றமழான் வேண்டுகோள் மூலம் நூல் வெளியீட்டின் அவசியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டதும் இதற்கான ஆதரவு உற்சாகமானதாக அமைந்ததுடன் இவ்வெளியூட்டு முயற்சிக்கு கலாநிதி அஸீஸின்மீது மதிப்பும் நன்றியுமிக்க ஒரு மாணவனான ஏ.ஜி.ஏ.பாரி அனுசரணை வழங்க முன் வந்தார்'' (எம். காலித் பாறுக், எ.எம்.எ.அஸீஸ் - பன்முகப்பார்வை, எ.எம்.எ. அஸீஸ் மன்றம், கொழும்பு, 2009- பக்:9,10)

அவரினதும் மேலும் சிலரதும் அனுசரணையுடன் 2007ஆம் ஆண்டிலிருந்து, பின்வரும் நூல்கள் கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

1) A.M.A. Azeez – A Profile
2007
ப:59 படங்கள்: 34 விலை :ரூ.200

2) A.M.A. Azeez – Senate Speeches
2008
ப:520 படங்கள்: 87 விலை :ரூ.1000

3) A.M.A. Azeez– Muslim Education in Sri Lanka
2009
ப:238 படங்கள்: 39 விலை :ரூ.350

4) எ.எம்.எ. அஸீஸ் - பன்முகப் பார்வை
2009
ப: 86 படங்கள்: 36 விலை :ரூ.150

5) **ඒ.එම්.ඒ. අසීස් - චරිත සටහනක්**
2010
ப:80 படங்கள்: 36 விலை :ரூ.150

6) A.M.A. Azeez– The West Reappraised
(Reprint of the book published in 1964)
2011
ப:144 படங்கள்: 11 விலை :ரூ.350

## 3

இவ்வருடத்தைய 39ஆவது ஞாபகார்த்த தினமான 2012 அக்டோபர் 4ஆம் திகதி, அஸீஸ் அவர்களினால் 1973ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்’ எனும் நூல் விரிவாக்கிய மீள்பிரசுரமாக வெளியிடப்படுகின்றது.

*மூலநூலில் பின்வரும் ஆறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன:*

1. அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்
2. நாம் என்ன செய்தோம்
3. அறபுத் தமிழ் ஆலிம் புலவர் (யாழ்ப்பாணம் முஹம்மது அசனா லெப்பை)
4. இன்றைய தேவைகள்
5. மொழிபெயர்ப்புக் கலை
6. ஸ்வாஹிலி மொழித் தொடர்பு

முதலாவது கட்டுரையான ‘அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்’ என்பது, 1966ஆம் ஆண்டு மருதமுனையில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய விழாவில் சமர்ப்பிக்கப்பட்டதாகும். (பார்க்க: எஸ்.ஏ. செய்யிது

ஹஸன் மௌலானா, இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள், அரசு வெளியீடு, கொழும்பு, 1968)

இதற்கு முன்னதாக, 1955ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய முஸ்லிம் கல்விக் கழகத்தின் விழாவொன்றில் இதே தலையங் கத்தில் தலைமையுரை நிகழ்த்தியிருக்கிறார். அவ்வுரையானது இப்புதிய பதிப்பில் முதலாம் கட்டுரையாகவும் மருதமுனை விழாவுக்குச் சமர்ப்பித்த கட்டுரை இரண்டாவதாகவும் இடம் பெறுகின்றன.

'நாம் என்ன செய்தோம்' எனும் இரண்டாவது கட்டுரை, சென்னையில் நிகழ்த்திய உரையின் ஒரு சிறிய பகுதி என்பதனாலும் இவ்வுரையானது இந்நூலில் முழுமையாக இடம் பெறுவதனாலும் இங்கு தனிக் கட்டுரையாகச் சேர்க்கப்படவில்லை.

மூன்றாவது கட்டுரையான 'அறபுத் தமிழ் ஆலிம் புலவர்' என்பது யாழ்ப்பாணத்து சு. முஹம்மது அசனாலெப்பை ஆலிம் புலவர் பற்றியது. 'புகழ்ப்பாவணி' எனும் நூலின் ஆசிரியர் இவராவார்.

புகழ்ப்பாவணியைப் பற்றி இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஆற்றப்பட்ட உரையொன்று இந்நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

நான்காவது கட்டுரையான 'இன்றைய தேவைகள்' என்பது அஸீஸின் முதலாவது வெளியீடான 'இலங்கையில் இஸ்லாம்' எனும் நூலுக்கான அவரது நூன் முகத்தின் ஒரு பகுதியாகும்.

ஐந்தாவது கட்டுரையான 'மொழி பெயர்ப்புக்கலை' மூல நூலில் உள்ளவாறே இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

ஆறாவது கட்டுரையான 'ஸ்வாஹிலி மொழித் தொடர்பு' என்பது அஸீஸின் 'கிழக்காபிரிக்கக் காட்சிகள்' எனும் நூலிலுள்ள 'ஸ்வாஹிலி மொழியும் அறபுத் தமிழும்' எனும் 24ஆம் அத்தியாயத்தின் ஒரு பகுதி யாகும். அவ்வத்தியாயம் இப்புதிய பதிப்பில் முழுமையாக இடம் பெறு கிறது.

## 4

லிசானுல் அர்வி (Lisanul Arwi) எனப்படும் 'அறபுத் தமிழ்' என்பதை ஒரே வசனத்தில் விளங்கப்படுத்த வேண்டுமாயின் 'தமிழ் மொழியினை அறபு எழுத்தினால் எழுதுதல்' எனக் கூறலாம். இலங்கையிலும், இந்தியாவின் மாபார் (இன்றையத் தமிழ்நாடு) பிரதேசத்திலும் இது வழக்கிலிருந்துள்ளது. இன்றைய கேரளப் பிரதேசம் அக்காலத்தில் மலபார் என அழைக்கப்பட்டது.

அறாபியரின் இலங்கையினுடனான தொடர்பு வர்த்தக ரீதியாக மிகப் புராதனமானது. கி.மு.5ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 5ஆம் நூற்றாண்டு காலப் பகுதிக்கான இலங்கை வரலாற்றை எடுத்துக் கூறும் மகாவம்சம் எனும் கிரந்தம் பண்டுகாபய மன்னன் தனது அநுராதபுரக்கோட்டையின் மேற்குப்புற வாசலருகே 'யோனசபாகவத்து'(yonasabhagavaththu) எனும் இடத்தினை யோனகர்களுக்கான வாழ்விடமாக ஒதுக்கியிருந்தான் எனக் கூறுகிறது. (மகாவம்சம்-வில்ஹெம் கெய்கர் ஆங்கில மொழிபெயர்ப்பு, 1950, ப: 74). விஜயனுக்குப் பின்னர் ஆட்சி பீடமேறிய பண்டுவாசதேவ மன்னனுக்கு அடுத்தபடியான அரசன் பண்டுகாபயனாகும். (கி.மு 377 - 307).

'யோன' எனும் சொல் பிராகிருத மொழியாகும். இது சமஸ்கிருதத்தில் 'யவன' என்றும், பாளியில் 'யொன்' என்றும் தமிழில் 'சோன' என்றும் வந்துள்ளது. 'சோன' என்பது பின்னர் 'சோனகர்' எனவும் வழக்கிலிருந் துள்ளது.

'யோன' எனப்படுவோர் கிரேக்கரா, பாரசீகரா அல்லது அறாபியரா என இனங்காணும் முயற்சி வரலாற்றாய்வாளரிடையே நீண்டநெடுங்காலமாக நிலவி வந்துள்ளது. இலங்கைக்கும் கிரேக்கத்துக்கும் வரலாற்றுக் காலம் முதல் தொடர்பிருந்தது என்பதை நிரூபிக்க விரும்பும் ஆய்வாளர், இப்பதம் கிரேக்கரையே சுட்டும் எனக் கூறுவர். எனினும் கெய்கர் போன்றோர் இதனை நிராகரிப்பதோடு, அயார்ட்டன் (Ayrton) எனும் ஆய்வாளர் 'மேற்கிலிருந்து வந்த வெளிநாட்டினர்' எனப் பொருள் கொள்வார்.

மேலைத்தேசத்திலிருந்து வந்த 'யவனர்' நீண்ட அங்கிகளையும், தலையை மூடிய உடையையும் அணிந்திருந்ததாகவும் தமது கப்பல்களில் குதிரைகளைக் கொண்டு வந்ததாகவும் பண்டையத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. (ஆதாரம்: அகநானூறு, பெரும் பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி). இவ்வாறான உடையணிந்தோர் அறாபியராவர்; கிரேக்கர்களும் உரோமானியர்களும் குட்டையான உடையணிந்ததோடு, தலையை மூடுவது மில்லை. அதனால் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சத்தில் கூறப்படும் 'யோன' என்போர், அறாபிய தீபகற்பத்தைச் சேர்ந்தோரே எனும் முடிவுக்கு வரலாம்.

இவ்வாறு வந்த அறாபியரின் மொழியான அறபு, வர்த்தகத்துக்கு மாத்திரம் பயன்பட்ட நிலையிலிருந்து கி.பி 7 ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் வருகையோடு சமய, கலாச்சாரப் பயன்பாட்டு மொழியாகவும் மாற்றமடை கின்றது. அல்குர்ஆனை அனைத்து முஸ்லிம்களும் வாசித்தறிந்து அதன் பிரகாரம் ஒழுக வேண்டுமெனும் நிலை ஏற்பட்டதன் பின்னர் முஸ்லிம்கள்

அனைவரும் அம்மொழியோடு நன்கு பரிச்சயமாயினர். அதனை எழுதவும், வாசிக்கவும், விளங்கிக் கொள்ளவும் இயலுமானவராயிருந்தனர்.

அதேவேளை, இவர்களது பேச்சு, வர்த்தக மொழியாகத் தமிழ் உபயோகிக்கப்பட்டது. எனினும் அதனை எழுத, வாசிக்கத் தெரிந்தோரின் தொகை மிகக் குறைவாகவேயிருந்தது. அவ்வாறு எழுதும் பொழுது சில அறபுச் சொற்களை அவற்றின் சரியான உச்சரிப்புக்கேற்பவும், உரிய கருத்தைத் தரக்கூடியதாகவும் தமிழ் மொழியில் எழுத முடியாதிருந்தது. சில தமிழ்ச் சொற்களை அறபு மொழியில் அதே உச்சரிப்பில் எழுத முடியாது. இதன் விளைவாகவே, தமிழ் மொழியினை அறபு எழுத்துக்களில் எழுதும் புதிய கிளைமொழி ஒன்று தோன்றியது. இதற்கான சமரசம் காணும் வகையில் சில புதிய எழுத்துக்களும் உருவாக்கப்பட்டன.

கி.பி. 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இலங்கையில் காலடி வைக்கும் வரை, அறபுத் தமிழ் முஸ்லிம்களிடையே குறிப்பாக முஸ்லிம் பெண் களிடையே பிரபலமான மொழியாயிருந்தது. போர்த்துக்கீசர் முஸ்லிம்களைத் துன்புறுத்தி அவர்களது வர்த்தக நடவடிக்கைகளை முற்றாக அழிக்க முற்பட் டனர். எவ்வளவு தூரம் என்றால், ஒருமுறை மாத்தறைப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் ஆண்கள் அனைவரையும் கொன்றுவிட்டு, பெண்களையும் பிள்ளைகளையும் அடிமைகளாகக் கொழும்புக்குக் கொண்டு வந்தனர். அன்றையத்தினம் நில்வளாகங்கை சிவப்பு நிறத்தில் ஓடியதாக வர்ணிக்கப் பட்டுள்ளது. போர்த்துகீசரின் இத்தகைய கொடுங்கோன்மையின் விளை வாகவும்; அவர்களைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரின் நட்புறவின்மையாலும் பாரிய துன்பங்களை முஸ்லிம்கள் அனுபவித்ததால், அறபுத்தமிழ் இலக்கியங் களும், ஏனைய கையெழுத்துச் சுவடிகளும் முற்றாக அழிந்து போயின.

கி.பி 1796ஆம் ஆண்டில் ஆங்கிலேயரது ஆட்சி ஆரம்பித்ததுடன் முஸ்லிம்கள் தமது இன்னல்களிலிந்து விடுபட்டு சகஜமாக வாழத் தொடங்கி யதனால், அறபுத் தமிழ் மொழியின் உபயோகமும் புத்துயிர் பெற்றது. விவாகப் பதிவான ‘கடுத்தம்’, கொடுக்கல் - வாங்கல் ஒப்பந்தங்கள், கடிதங்கள், நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்கள் என்பன அம்மொழியில் செய்யப்பட்டன.

இவற்றுக்கும் மேலாக, இஸ்லாமிய இலக்கியமானது அறபுத் தமிழ் மொழியில் வளர்ச்சியடைந்தது. அவை சமய அடிப்படையிலும், நற்போதனை களை வழங்குவதாகவும், செய்யுள் நடையிலும் அமைந்திருந்தன. அவற்றை இயற்றியோர் பெரும்பாலும் ஆலிம்களாயிருந்தனர். வீட்டுக்குள்ளிருக்கும் பெண்களுக்குப் போதனை வழங்கும் சாதனமாகவும் அவை பயன்பட்டன.

றஸூல்மாலை, தலைப்பாத்திஹா, முபாறக்மாலை, பெண்புத்திமாலை என்பன பெண்களால் விரும்பிப் படிக்கப்பட்டன.

இலங்கையில் 1868 ஆம் ஆண்டில்தான் முதலாவது அறபுத்தமிழ் நூல் அச்சில் வெளிவந்தது. அன்றிலிருந்து இன்றை வரை இலங்கையில் அச்சில் வெளிவந்து எமக்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள நூல்கள் வருமாறு:

1. செய்கு முஸ்தபா (வலி)
   மீசான் மாலை
   1868
   பேருவளை

2. செய்கு முஸ்தபா (வலி)
   பதஹுர்ரஹ்மான் பீ தர்ஜுமதி தப்ஸீறுல் குர்ஆன்
   பேருவளை
   1873
   ப: 653
   (அல்குர்ஆன் முழுவதையும் இவர் அறபுத் தமிழில் தர்ஜுமாச் செய்தார். ஆயினும் 5 ஜுஸூக்கள் மட்டுமே அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளன.)

3. செய்கு முஹம்மது லெப்பை ஆலிம்
   (கசாவத்தை ஆலிம் புலவர் அப்பா)
   தீன் மாலை
   கண்டி
   1878

4. எம்.சி.சித்திலெப்பை
   ஹிதாயத்துல் காசிமிய்யா பீ ஷஹிலில் சியாத்தில் அறபியா
   கண்டி
   1891
   ப: 242 விலை: ரூ.1.50
   (இலங்கையிலும்,தென்னிந்தியாவிலும் இது நீண்ட காலமாகப் பாடப் புத்தகமாக உபயோகிக்கப்பட்டது.)

5. எம்.சி.சித்திலெப்பை
   துஹ்பதுல் நகுவு
   கண்டி
   1892
   ப: 112 விலை: சதம்: 75

6. செய்ஹு அப்துல் றஹ்மான் இபுனுல் ஹக்கீம்
ஹாஜி மீராலெப்பை மரைக்கார் அல் மக்தூமி
வாதவிலக ஆராட்டு
கொழும்பு
1899
ப: 16 விலை: சதம்.10

7. மிஸ்ரியாஹுதீன்
எஸ்.ஏ. ரஹ்மான்
கொழும்பு
1901
ப: 304 விலை: ரூ. 3.00

8. புஃல் அமா குர்ஆன்மஜீத்
ரீ. முஹம்மது சுலைமான் சாஹீப்
கொழும்பு
1914
ப: 80 விலை: சதம்.50

9. காதிறு சம்சுதீன் புலவர்
முஸ்தபா மாலை
1919

10. காதிறு சம்சுதீன் புலவர்
முபாறக் மாலை
1919

11. மௌலவி.வை.எம்.ஹனிப் நத்வி
பகூரத் அல் அதப்
கொழும்பு
1926
ப: 116 விலை: 1.12

12. ஷெய்க் பாவா ஷெய்க் சுலைமானுல் காதிரி ஸாஹிப்
றாத்திபத்துல் காமிலியா பீ தரீக்கத்துல் காதிரியா
கொழும்பு
1938
ப: 24 விலை: சதம்.25

(மேலதிக விபரங்களுக்கு : எஸ்.எச்.எம். ஜெமீல், சுவடி ஆற்றுப் படை - பாகம்1, 1994; சுவடி ஆற்றுப்படை- பாகம் 2 - 1995)

இவைதவிர, மேலும் சில இலக்கிய ஆக்கங்கள் அவற்றின் கையெழுத் துப் பிரதிகளாக எங்கேயாவது சிலரின் பாதுகாப்பில் இன்றும் இருக்கலாம். லண்டனிலுள்ள India Office Library எனும் இடத்தில் அறபுத் தமிழ் நூல்களைத் தாம் கண்டதாக அஸீஸ் குறிப்பிட்டுள்ளார். ஒல்லாந்திலுள்ள லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தில் சில அறபுத்தமிழ் நூல்கள் உள்ளதாக குறிப்புகள் உண்டு.

கசாவத்தை ஆலிம் புலவர் அப்பாவினால் எழுதப்பட்ட அறபு மற்றும் அறபுத் தமிழ் மொழிகளிலான சில கிரந்தங்களை அவரின் பேரரான செய்யித் முஹம்மத் ஜிப்ரி, அக்குறணையிலுள்ள தமது இல்லத்தில் பாதுகாத்து வைத்திருக்கிறார். அவற்றை விபரமாகப் பார்க்கக் கூடிய வாய்ப்பு அங்கு இரு நாட்கள் தங்கியிருந்தபோது எனக்குக் கிடைத்தது. இதில் ஒரு விசேடம் என்னவென்றால் ஒரு நூற்றாண்டு கழிந்தும் அச்செழுத்தை விட அழகான முறையில் எழுதுவதற்கு உபயோகிக்கப்பட்ட பல வர்ண மைகள் இன்றும் சிறிது கூட மங்காமல் அன்று எழுதியது போன்று மிகப் பிரகாசமாயுள்ளன. ஒவ்வொரு பக்கத்தின் நான்கு புற ஓரங்களிலும் கட்டமிடப்பட்டுள்ள அறபு எழுத்தணிக்கலையிலான வரைபுகள் மிகவும் அழகானவையாயுள்ளன.

## 5

அறபுத் தமிழைப் பற்றிக் காலத்துக்குக்காலம் பல கட்டுரைகள் வெளிவந்துள்ள போதிலும், அம்மொழியைப் பற்றி பரிபூரண ஆய்வின் வெளிப்பாடான நூல் கீழக்கரை அப்ழலுல் உலமா கலாநிதி தைக்கா சுஐப் ஆலிம் அவர்களுடைய 'Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu' என்பதாகும். சுமார் முப்பது வருட காலமாகப் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட அவரது ஆய்வின் வெளிப்பாடாக, 1993ஆம் ஆண்டில் வெளிவந்த 824 பக்கங்களைக் கொண்ட ஆங்கில மொழி மூலமான இந்நூல் அறபு, அர்வி,(அறபுத்தமிழ்), பாரசீகம், உருது மொழிகளிலான இலக்கியம் மற்றும் கல்வித்துறைக்கு இலங்கை மற்றும் தமிழ்நாடு என்பன வழங்கிய பங்களிப்பு என்பதனை மிக விரிவாக ஆராய்கின்றது.

இவ்வாய்வினை மேற்கொள்வதிலும், பூர்த்தி செய்வதிலும், நூலாக வெளியிடுவதிலும் தனது ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், உற்சாக மளித்தவராயும் இலங்கையைச் சேர்ந்த கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி விளங்கினார் என நூலின் பலவிடங்களில் நன்றியுணர்வுடன் அவர் குறிப்பிடுகின்றார்.

அறபுத் தமிழ் மொழியின் அமைப்புப் பற்றிக் கீழே தரப்படும் அட்டவணைகள் அவரது நூலிலிருந்து பெறப்பட்டனவாகும். (ப: 95-99; 782 -784)

அறபு மொழியில் மொத்தம் 28 எழுத்துக்கள் உள்ளன. இவற்றுள் தமிழ் மொழியில் உச்சரிக்கும்போது சரியான ஒலியைப் பெற முடியாத மெய் யெழுத்துக்கள் பின்வரும் 18 ஆகும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ش | ز | ذ | د | خ | ح | ج | ث | ب |
| ه | ق | ف | غ | ع | ظ | ط | ض | ص |

தமிழ் மொழியில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. இவற்றுள் 2 உயிரெழுத்துக்களையும், 11 மெய்யெழுத்துக்களையும் மொத்தம் 13 எழுத்துக் களை அறபியில் உச்சரிக்கும்போது சரியான ஒலியைப் பெற முடியாது. அவ்வெழுத்துக்களாவன:

***ங, ச, ஞ, ட (படம்), ட (பட்டம்), ள, ழ, ண, ர, ற, ப, க (சங்கம்), எ, ஒ***

இச்சிக்கலைத் தீர்த்து, தமிழ்-அறபு ஆகிய மொழிகளுக்கிடையே சமரசம் கண்டு, சரியான உச்சரிப்பு ஒலியைப் பெறுவதற்கான எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பட்டது. அறபு எழுத்துக்களுடன் புள்ளியை (குற்று, நுக்கத்) சேர்ப் பதன் மூலம் 12 புதிய எழுத்துக்கள் உருவாகின.

அவற்றினை தைக்கா சுஐப் ஆலிம் பின்வருமாறு விளக்கியுள்ளார்: (பக்:783,784)

## FORMATION OF NEW LETTERS IN ARWI

1. To the already existing dot in ج, two more dots are added to make the Tamil ச thus چ (pronounced as the 'ch' in 'much').

2. Below the letter د is added a dot, to make it the equivalent of Tamil ட (as in படம்) thus ڊ (pronounced a as the 'd' in 'Burden').

3. By placing two dots under د, the sound of ட (as in பட்டம்) may be obtained, which is equivalent to 'T' in English. It is written as ڍ.

4. While for the Tamil ற the Arabic ر is used in its original form, for the Tamil ர, a dot is put under the same Arabic letter thus ڔ, which is 'R' in English.

5. A dot added below ض gives the sound of ழ in Tamil (as in பழம்). It is obtained thus ضٜ This letter has no equivalent in English but the two English letters, 'zh' convey the sound when written together.

6. By placing a dot below ض the Tamil sound ள is obtained, (as in பள்ளம்). This letter is writen as صٜ and it also has no equivalent in English.

7. By adding three dots under the Arabic letter ع the Tamil letter ங, is produced thus ڠ (pronounced as the 'ng' in 'Going').

8. By adding a dot below ف the soft Tamil ப (as in பசி) is obtained thus ڣ equivalent of 'p'. (This shows that Arwi was never influenced by Persian at all in its evolution because, the 'p' in Persian language is made by adding two more dots to ب thus پ

9. The sound of 'G' (as in சங்கம்) has been obtained by placing a dot below ك resulting in كٜ which is 'G' as in 'God'.

10. The sound of the Tamil letter ன (which has no English equivalent) is obtained by adding below the ن a dot thus نٜ.

11. By adding two dots below the letter ن in the Arabic alphabet, we get ஞ (as in Tamil தஞ்சம்). This letter is written thus ڹ and it also has no equivalent in English but the sound may be indicated by using the English letters 'g' and 'n' together as 'gn' (as in 'sign').

12. For producing the vowel sound of ஒ (pronounced as the 'o' in 'wonder'), the sign ٗ is put on top of any letter. This is called *Ko Peysh*). This is written as

13. By putting the same sign ٗ under a latter, the vowel sound of எ (pronounced as the 'e' in men) is produced. This is called *Ko Zayr*.

இதன் விளைவாக அறபும், புதிதாகச் சேர்க்கப்பட்ட அறபுத் தமிழ் எழுத்துக்களுமாக மொத்தம் 40 எழுத்துக்களைக் கொண்டதாக இம்மொழி அமைந்தது.



ஒரு காலத்தில், பெருந்தொகையான இஸ்லாமிய இலக்கியங்கள் இம் மொழியிற் படைக்கப்பட்டதோடு, நாவலொன்றுகூட வெளிவந்துள்ளது.

மிகக் கூடிய நூல்களை அறபுத் தமிழில் எழுதிய செய்யத் முஹம்மத் ஆலிம் (கி.பி.1816-1898) எனும் இயற் பெயரைக் கொண்ட இமாமுல் அரூஸ் அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் 'மதீனத்துன் நுஹாஸ்' எனும் நாவலை அம்மொழியில் எழுதியுள்ளார். இது 1900ஆம் ஆண்டு கொழும்பு, புறக்கோட்டை, இரண்டாம் குறுக்குத் தெருவிலிருந்த மத்பாதுஸ் சுலைமானியா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் மறுபிரசுரம் 1903ஆம் ஆண்டு வெளிவந்தது.

இந்நாவல் எம்.கே.ஈ.மௌலாவினால் தமிழ் மொழியில் 'தாமிரப் பட்டினம்' எனும் பெயரில் 1979இல் வெளிவந்தது. தென்னிந்தியா கீழக் கரையைச் சேர்ந்த எம். கே. ஈ. மௌலானா வர்த்தகத்தின் நிமித்தம் தமது வாழ்நாள் முழுவதும் மன்னார், முள்ளிக்குளத்தில் வாழ்ந்தவராவார். அவரது

பெயருக்கு முன்னாலுள்ள 'எம். கே' என்பது 'மூள்ளிக் குளம்' என்பதைக் குறிக்கும். 'பசுங்கதிர்' எனும் மாதாந்த இதழை வெளியிட்டதோடு, 'இரு வைத்தியர்களின் கதை' எனும் நாவலையும் ''சேதுவில் இருந்து சிந்துவரை'' எனும் ஆய்வு நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். (தகவல் : கலைவாதி கலீல், தாஸிம் அகமது)

கிறிஸ்தவ வேதநூலான பைபிள், அறபுத் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டதாகவும் தைக்கா சுஐப் ஆலிம் தமது நூலில் பிரஸ்தாபித்துள்ளார். (பக்கம்: 785)

அறபுத் தமிழ் நூலொன்று கடைசியாக 1938ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்துள்ளது. அதற்குப் பின்னர் அது தேய்ந்து, இன்று அம்மொழியுடன் பரிச்சயமுள்ளவர் எவராவது உளரா எனும் நிலைக்கு வந்துள்ளது. அம் மொழியின் உபயோகம் குறைவடைந்து சென்றதற்கான காரணங்களை எ.எம்.எ. அஸீஸ் இந்நூலிலுள்ள தமது கட்டுரைகளில் விளக்கியுள்ளதோடு, அதற்குப் புத்துயிரளிப்பதற்கான வழிகளையும் கூறுகிறார். இதே விடயங் களைத் தைக்கா சுஐப் ஆலிமும் தனது நூலில் விளக்கியுள்ளார்.

1936 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம்களின் கல்வி பற்றிய மாநாடொன்று கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் அல்லாமா யூஸுப் அலி தலைமையில் நடைபெற்றுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியாக அறபுத் தமிழைப் பிரகடனம் செய்ய வேண்டுமெனும் பிரேரணையொன்று இம்மாநாட்டில் ஆராயப்பட்டாலும் அப்பிரேரணைக்குப் போதிய ஆதரவு கிடைக்காமையினால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

1963 ஆம் ஆண்டில் எம்.எச்.எம். சஹீத் என்பவர் அகில இலங்கை அறபுத் தமிழ் இயக்கத்தை ஆரம்பித்து சிலகாலம் நடத்திச் சென்றார். எனினும் அது வேரூன்றவில்லை.

இலங்கையின் முதலாவது அறபு வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றுப் பின்னர் கல்வித்திணைக்களத்திற் பணிப்பாளர் பதவிக்கு உயர்ந்த அறபுத் தமிழ் மொழி அறிஞரான எம்.பி. நூர்தீன் அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் அறபு மற்றும் அறபுத் தமிழ் மொழிகளின் கற்கையை மேம்படுத்தவேண்டுமென அயராது உழைத்தார். 1980 ஜனவரி மாதம் பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் 'A System of Islamic Education for Sri Lankan Muslims' எனும் ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பித்து, அம்மொழிக்குப் புத்துயிரளிக்க வேண்டுமென வலியுறுத்தினார். அறபுத் தமிழை 'சோனகம்' என அழைக் கலாம் எனவும் அபிப்பிராயப்பட்டார்.

அறபு மொழிக் கல்வி விருத்தியிலும் அறபுத் தமிழை மீட்டெடுத்தலிலும் மிகவும் அக்கறை கொண்டிருந்தவர் எ.எம்.எ. அஸீஸ் ஆவார். தனது முயற்சியினால் தொடங்கப்பட்ட இலங்கை முஸ்லிம் கல்விச் சகாயநிதியத்தின் மூலம்,1947ஆம் ஆண்டில் அறபுமொழி மற்றும் இஸ்லாமியக் கற்கை நெறிகளில் பாண்டித்தியம் பெறுவதற்காக நான்கு இலங்கையரை, எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலுள்ள அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைத்தார். மௌலவிகளான ஏ.எச்.எம். ஹுஸைன், ஏ.முஹம்மத் அலவி, யூ.ஏ.உபைதுஸ் சத்தார், ஏ.ஆர்.எம். சுபைர் என்போரே அவர்களாவர்.

இதே போன்று அறபுத் தமிழ் மற்றும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபடுமாறு எம்.எம். உவைஸைத் தூண்டியோருள் முக்கியமானவர் அஸீஸ் ஆவார். இந்தியாவுக்குச் சென்று அவற்றைத் தேடும் பணியில் ஈடுபடுமாறு ஊக்கப்படுத்தியதோடு, அதற்கான ஏற்பாடுகளையும், முஸ்லிம் கல்விச் சகாயநிதியத்தின் மூலம் பணவசதியையும் செய்து கொடுத்தார். இதன் விளைவாக, சீறாப் புராணமும் குணங்குடி மஸ்தான் ஸாஹிப் பாடல்களுமே இஸ்லாமிய இலக்கியம் என்றிருந்த நிலையினை மாற்றி, எமக்கு ஈராயிரத்துக்கு மேற்பட்ட இலக்கிய நூல்கள் உள்ளன என்பதை உவைஸ் வெளிக்கொணர்ந்தார். அறபுத் தமிழ் மொழியின் தோற்றமும் இஸ்லாமிய இலக்கியம் வளர்வதற்குக் காலாயிருந்திருக்கிறது.

அறபு - தமிழ் அகராதியொன்றின் முக்கியத்துவத்தை 1944ஆம் ஆண்டில் சுவாமி விபுலானந்தருடன் அஸீஸ் கலந்துரையாடியுள்ளார். அஸீஸ் தமது கட்டுரையொன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார்: ''சுவாமி விபுலானந்தர் 1944 இல் கண்டியில் எனது உத்தியோகபூர்வ இல்லமான மௌன்ட் எய்ரியில் 12 நாட்கள் என்னுடன் தங்கியிருந்தார். பல விடயங்கள் பற்றி நாங்கள் கலந்துரையாடினோம். அறபு - தமிழ் அகராதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன் அதனைத் தயாரிப்பதற்கு எனக்கு உதவி செய்வதாகவும் அவர் வாக்குறுதியளித்தார்.''

* * * * *

அறபுத் தமிழின் உபயோகத்தை இந்நாட்டில் மீண்டுமொருமுறை பிரபல்யப்படுத்த முடியுமா என்பதற்கான சூழ்நிலைகளைக் கூர்ந்து அவதானித்தல் இவ்விடத்தில் பொருத்தமானதாகும். அவ்வாறு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பிரதானமாகப் பாடசாலைகளிலும், அறபுக் கல்லூரிகளிலுமே ஆரம்பிக்கப்படல் முடியும்.

முஸ்லிம் பாடசாலைகளில் அறபு மொழியை ஒரு பாடமாகக் கற்பித்தலின் இன்றைய நிலையென்ன? அரச சபை ஆட்சிக்காலத்தில் (1931-1947), பெருந்தொகையான பாடசாலைகள் நிறுவப்பட்ட காலகட்டத்தில் ஏனைய பாடங்களோடு இஸ்லாம், அறபு ஆகிய இரு பாடங்களைப் போதிக்கும் பாடசாலைகள் 'முஸ்லிம் பாடசாலைகள்' என வகுக்கப்பட்டன.

பாடசாலையில் அறபு மொழியைக் கற்பித்தலுக்கான முதலாவது ஆசிரியராக 1.10.1938 இல் அப்துல் பாரி மௌலானா நியமனம் பெற்றார்.

அரச சபையில் 8.4.1942 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் முதலாவது அறபு மொழிப் பரிசோதகர் அவ்வாண்டில் நியமிக்கப் பட்டார். அவ்வாறு நியமனம் பெற்றவர் எம்.பி. நூர்தீன் ஆவார்.

1942 இல் அறபு மொழி எஸ்.எஸ்.ஸி பரீட்சைக்குரிய பாடமாக அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த 70 வருடங்களாகப் பாடசாலைகளில் அறபு மொழி போதிக்கப் பட்டு வருகின்றது. இருப்பினும் ஜி.ஸி.ஈ சாதாரண / உயர்தரப் பரீட்சை களுக்குத் தோற்றுவதற்குத் தாம் தேர்ந்தெடுக்கும் பாடங்களுள் ஒன்றாக அறபு மொழியை எத்தனை மாணவர் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதனைப் பின்வரும் புள்ளிவிபரம் காட்டும் :

**ஜி.ஸி.ஈ சாதாரண தரப் பரீட்சை - டிசம்பர் 2010**

*பின்வரும் பாடங்களுக்குத் தோற்றியோரின் மொத்தத் தொகை:*

| **பாடம்** | **மொழிமூலம்** | | | |
|---|---|---|---|---|
| | **சிங்களம்** | **தமிழ்** | **ஆங்கிலம்** | **மொத்தம்** |
| இஸ்லாம் | 3484 | 26472 | 1393 | 31349 |
| அறபு | 13 | 1664 | 162 | 1839 |
| அறபு-இலக்கியம் | 04 | 1274 | 26 | 1304 |
| மேற்கூறியோருள் பாடசாலைப் பரீட்சாத்திகளின் தொகை: | | | | |
| இஸ்லாம் | 3402 | 21618 | 37 | 25057 |
| ***அறபு*** | ***00*** | ***584*** | ***1*** | ***585*** |
| அறபு-இலக்கியம் | 01 | 349 | 0 | 350 |

**ஜி.ஸி.ஈ உயர்தரப் பரீட்சை - ஆகஸ்ட் 2010**

| பாடம் | மொழிமூலம் | | | |
|---|---|---|---|---|
| | **சிங்களம்** | **ஆங்கிலம்** | **தமிழ்** | **மொத்தம்** |
| இஸ்லாம் | 104 | 5095 | 24 | 5223 |
| இஸ்லாமிய - நாகரீகம் | 26 | 2315 | 08 | 2349 |
| அறபு | 14 | 791 | 16 | 821 |
| உருது | - | 02 | - | 02 |

இவர்களுள் பாடசாலைப் பரீட்சாத்திகளின் தொகை வருமாறு:

| | | |
|---|---|---|
| இஸ்லாம் | - | 3869 |
| இஸ்லாமிய நாகரீகம் | - | 1753 |
| *அறபு* | **-** | ***187*** |
| உருது | - | - |

(ஆதாரம்: Statistical Handbook – Department of Examinations 2008-2010)

பாடசாலைகளில் எழுபது வருடங்களாகத் தொடர்ச்சியாகக் கற்பிக்கப் பட்டு வருகின்ற அறபு மொழியை ஒரு பாடமாகத் தேர்ந்தெடுப்பதில் மாணவர் காட்டும் குறைவான அக்கறையினை மேலேயுள்ள அட்டவணைகள் காட்டுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் அறபுத் தமிழ் எனும் புதுப்பாடமொன்றில் மாணவர்களின் ஆர்வத்தினை ஏற்படுத்துவது சாத்தியமா?

இன்றுள்ள எமது 221 அறபுக் கல்லூரிகளில் எங்கணுமே அறபுத் தமிழ் கற்பிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

எனவே, அறபுத் தமிழ்மொழியை மீண்டுமொருமுறை புழக்கத்துக்குக் கொண்டுவரல் சாத்தியமா என்பதனை அறிஞர்களதும், ஆர்வலர்களதும் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

**எஸ்.எச்.எம். ஜெமீல்**

1

# அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் - 1

கடந்த சுமார் 53 ஆண்டுகளாக இந்தச் சங்கம் (தென்னிந்திய முஸ்லிம் கல்விக்கழகம்) தென்னிந்திய முஸ்லிம் சமூகத்திற்கு கல்வித்துறையிலும், சமூக முன்னேற்றத்துறையிலும் ஆற்றிவந்துள்ள மகத்தான சேவையைப்பற்றி இங்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டியது அவசியமில்லை எனினும் இந்தச் சந்தர்ப்பத்திலே உங்கள் சங்கத்திற்கு ஊற்றுக் கண்ணாய் அமைந்துள்ள அலிகார் இயக்கத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமுடைய தாகும். இதே அலிகார் இயக்கம் இலங்கை முஸ்லிம்களாகிய எங்களுக்கும் ஒரு தூண்டு கோலாக அமையத் தவறவில்லை. ஏனெனில் நவீன ஆங்கிலக் கல்வியைப் பெறாமையால் எங்கள் சமூகத்தினர் கல்வித்துறையில் பிற் போக்காளர்களாயும் அரசியலிலே அனாதைகளாகவும், கலாசாரத்திலே ஒதுங்கியவர்களாகவும் இருந்து வந்த நிலையை உணர்ந்து அதற்குப் பரிகார மாக 1891-92ஆம் ஆண்டுகளில் கொழும்பிலே அவர்கள் அல் மத்ரஸுத்துஸ் ஸாஹிறா என்ற கல்வி நிலையத்தை நிறுவினார்கள். அந்தக் கல்வி நிலையம் இலங்கையில் இன்றுள்ள எல்லா முஸ்லிம் கல்வி ஸ்தாபனங்களுக்கும் தாயகமாகவும், முஸ்லிம்களின் சிந்தனைக்கும் செயலுக்கும், ஆக்கத்தோடு ஊக்கமும் தரும் அறிவுக் கதிர் பரப்பும் மணிவிளக்காகவும் திகழ்கின்றது. மத்ரஸத்துஸ் ஸாஹிறாவாக ஆரம்பிக்கப்பட்டு, ஸாஹிறாக் கல்லூரியாக இன்று காட்சியளிக்கும் அந்தக் கலைப் பீடத்திற்கு அதிபராயிருப்பதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். அத்துடன் தகுதியுள்ள முஸ்லிம் மாணவர் களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டுவதற்கு இலங்கைக்கு அவ்வப் பொழுது வந்துபோன உங்கள் சங்கத்தின் பிரதிநிதிகள், இத்தகைய சகாயமாற்றும் துறையிலே எங்கள் சிந்தனையையும் கிளறிவிட்டனர். 1945ஆம் ஆண்டிலே இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி என்ற பெயரால் ஒரு ஸ்தாபனத்தையும் நாங்கள் நிறுவினோம். இந்த ஸ்தாபனத்தின் ஆரம்ப காலத்திருந்தே அதன் நிர்வாகக்குழுவின் தலைவனாக இருந்து பணியாற்றும் பொறுப்பும்

பெருமையும் என்னைச் சார்ந்துள்ளது. ஆகவே உங்கள் ஒரே சங்கத்தின் இலட்சியங்களாயமைந்துள்ள இரு துறைகளிலே இலங்கை முஸ்லிம்களின் நலனுக்காகப் பணியாற்றும் இரண்டு தனி ஸ்தாபனங்களின் பிரதிநிதியாக நான் உங்கள் மத்தியில் தோன்றுகிறேன். எனவே, உங்கள் சங்கத்தோடு நேரடியான தொடர்பு எனக்கில்லையாயினும் உங்களுக்கும் உங்கள் சங்கத்துக்கும் நான் புறம்பானவன் அல்லன். கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இலங்கை முஸ்லிம்களுக்கும் இந்நாட்டு முஸ்லிம்களுக்குமிடையே இடைவிடாத நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. கப்பல் ஓட்டிகளாக இலங்கைக்கு வந்த அதே அறபியர்கள் உங்கள் நாட்டிற்கும் வந்தார்கள். வர்த்தக நிமித்தமாக ஏற்பட்ட அவர்களின் வருகை எங்கள் நாடுகளில் இஸ்லாம் மதத்தையும் உடன் கொண்டுவந்து சேர்த்தது. இங்கே இஸ்லாம் மதம் ஓர் ஆளும் வர்க்கத்தினரால் எம்மீது திணிக்கப்பட்ட தொன்றாய் இல்லாமல் நேர்மையாக வர்த்தக நிமித்தம் எம்மிடை வந்தவர்களிடமிருந்து எம்நாடு பெற்ற பெரும் பேறாக இருந்து கொண்டிருக்கிறது. இதை நாம் நன்குணர்தல் வேண்டும்.

நம்மிருவருக்கும் பொதுவாய் அமைந்துள்ள இந்தப் பண்டைச் செல்வம், பூகோள ரீதியாய் எம்மிரு நாட்டிற்குமிடையேயுள்ள அண்மையின் காரணமாய் வாணிபத்துறையில் மாத்திரமின்றி சமூக, கலாசாரத் துறைகளிலும் எமது உறவை அபிவிருத்தி செய்துள்ளது. இந்த உறவு இலங்கை முஸ்லிம்களுக்கும், தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் பெரும்பாலும் பொது மொழியாயமைந்துள்ள தமிழின் காரணமாயும், வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலிகாத் போன்ற அறபுக் கல்லூரிகளாலும் வலுவடைந்து வந்திருக்கின்றது. பல தலைமுறைகளாக இலங்கை முஸ்லிம்கள் தென்னிந்திய மத்ரஸாக்களிலே இஸ்லாமியக் கல்வி பயின்று தங்கள் நாடாகிய இலங்கையிலே அவ்வறிவைப்பரப்பி வந்துள்ளனர். வர்த்தகத்துறையில் தென்னிந்தியாவின் கீழ்க்கரையிலுள்ள நாகபட்டினம், அதிராம்பட்டினம், கீழ்க்கரை, காயல் நகர் ஆகிய துறைமுகங்களுக்கும், இலங்கையிலுள்ள கல்பிட்டி, வேருவளை, காலி, மட்டக்களப்பு, யாழ் நகர் ஆகிய பட்டினங்களுக்குமிடையே நடந்து வந்த வாணிபத்தின் மூலமாயும் இவ்வுறவு பெருகி வந்துள்ளது. இத்தகைய நெருங்கிய உறவுகளின் விளைவாக சதக்கத்துல்லா அப்பா, மாப்பிள்ளைலெப்பை ஆலிம், கொழும்பு ஆலிம் சாகிப் போன்ற பெரியார்கள் நம் இரு நாட்டு முஸ்லிம்களாலும் சமமாகப் போற்றப்பட்டு வருவதுடன், இங்குள்ள நாகூரும், எங்கள் நாட்டிலுள்ள பாவா ஆதமலையும், எம் இரு நாட்டவர்க்குமிடையே உள்ள தொடர்பை வளர்த்து வருகின்றன.

இலங்கை உங்கள் நாட்டிற்கு இணையில்லா இரத்தினங்களையும், ஆழ் கடல் முத்துக்களையும் அள்ளிக்கொடுத்து வந்திருப்பது போல் நீங்கள் எங்கள் நாட்டிற்கு விலைமதிக்கவொண்ணாத இஸ்லாமிய இலக்கியப் பெருநிதியை வாரிவழங்கி வந்துள்ளீரெனக் கூறலாம். எம்மிடையே இருந்து வந்துள்ள தொடர்பும் அதன் விளைவுகளும் தக்க முறையில் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய ஒரு துறையாகும். இத்துறையில் ஈடுபடும் மாணவர் களை தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கமோ அல்லது இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியோ அல்லது இவ்விரு ஸ்தாபனங்களும் கூட்டாகவோ ஊக்குவித்தல் அவசியமாகும். இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளேயே இம்முயற்சியில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மாணவன் ஒருவன் ஈடுபடு வானேயானால் அதை விட எனக்கு மகிழ்ச்சி தரக்கூடியதொன்று இருக்க முடியாது. தென்னிந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் தமிழ் மொழி பேசுவோர். அதே போல் இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையினரும் தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவ்விதமாகச் சமூக கலாசார மொழித்துறைகளிலே ஒற்றுமைப்பட்டுள்ள நமக்கு, நம்மை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளிற் பலவும் பொதுவானவையாகவே அமைந் துள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதில் இருவரும் ஒருவரி டமிருந்து மற்றவர் பல கருத்துக்களை பரிமாறிக் கொள்ளக் கூடியவர் களாயிருக்கின்றோம். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் சமீபத்தில் ஏககாலத்தில் விடுதலையடைந்த எம்மிரு நாடுகளிலும் முஸ்லிம்களாகிய நாம் சிறுபான்மையினராய் இருந்து கொண்டிருக்கிறோம். எமது சொந்த கலாசாரத்தைப் புறக்கணித்து விடாது அதனைப் போற்றி வளர்ப்பதே இலங்கை முஸ்லிம்களாகிய நாங்கள் எங்கள் நாட்டிற்குச் செய்யக்கூடிய பெருஞ்சேவையென்று கருதுகிறோம். உங்களுடைய கருத்தும் இந்நாட்டைப் பொறுத்தவரை அவ்வாறாகவே இருக்குமென நான் நினைக்கிறேன். பல தரப்பட்ட கலாசாரங்கள் நிலவும் ஒரு நாட்டில் அரசியல் ஒற்றுமையைக் குலைத்து விடாமல் தனிப்பட்ட சமூகங்களின் கலாசாரங்களைப் பேணுவது எவ்விதம் என்பதும் நான் மேற்சொன்ன முயற்சியில் இருந்து எழும் பிரச்சி னைகளாகும். இரு நாட்டு முஸ்லிம்களிடையேயும் மொழிப் பிரச்சினையிலும் பல ஒற்றுமைகள் காணக்கூடியனவாய் இருக்கின்றன. தென்னிந்தியாவில் ஹிந்திக்கும், இலங்கையில் சிங்களத்துக்கும் உள்ள அந்தஸ்தினால் எழுந் துள்ள பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு இந்நாட்டு முஸ்லிம் தலைவர் களும் எம் முஸ்லிம் தலைவர்களும் நிதானத்தையும் தீர்க்க தரிசனத்தையும் கைக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நாட்டின் எதிர்காலக் குடிமக்களாகிய சிறுவர் சிறுமிகளுக்கு வேண்டிய கல்வியை ஊட்டும் பொறுப்பை தம்முடையதாகவே அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் இக்காலத்தில் முஸ்லிம் மாணவ மாணவிகளுக்கு இஸ்லாமிய அடிப்படையில் கல்வி போதிக்க வேண்டிய பிரச்சினை எம் முழுக்கவனத்தையும் பெற வேண்டியதொன்றாகும். நம் இரு நாட்டு முஸ்லிம் களும் அறபுக் கலாசாரப் பொக்கிஷத்திற்கு வாரிசுகளாக இருந்த போதிலும் இன்று நாம் அறபு மொழி பேசுபவர்களாய் இல்லை. இருந்தாலும் கூட மார்க்க சம்பந்தப்பட்ட மட்டில் அறபு மொழி வகித்து வரும் முக்கியத்துவத்தை உத்தேசித்து அதனை நாம் புறக்கணித்துவிடுவதற்கில்லை. ஆகவே முஸ்லிம் பிள்ளைகளின் பாடத்திட்டத்தில் அறபு மொழிக்கு அளிக்கப்பட வேண்டிய அந்தஸ்து என்ன என்பதும் தீர்க்கமாக ஆலோசிக்கப்படவேண்டிய தொன்றாகும். பண்டைக்காலத் தொடர்புகளையிட்டும் எம்மிடையுள்ள பல பொதுவான பிரச்சினைகளையிட்டும், நீங்கள் பேசுகின்ற அதே தமிழ் மொழியைப் பேசுகின்றவன் என்ற காரணத்தையிட்டும் எனக்கு உங்கள் விழாவிலே பங்கு கொள்ள அளித்த வாய்ப்பு பொருத்தமற்றதல்ல என்பதில் பெருமிதம் அடைகிறேன். நான் இன்று உங்கள் மத்தியில் வந்திருப்பது மூத்த சகோதரர்களாகிய நீங்கள் இளைய சகோதரர்களாகிய இலங்கை முஸ்லிம்களுக்குக் காட்டியுள்ள அன்பையும், ஆதரவையும், சகோதரத்துவ உணர்ச்சியையும் பிரதிபலிப்பதாயிருக்கின்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க இலங்கை முஸ்லிம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது வேறு எக்காரணங்களைப் பற்றி பொருத்தமுடையதாயிருப்பினும், தனிப்பட்ட முறையில், எனக்களிக்கப்பட்டுள்ள கௌரவத்திற்காக என் சொந்தமுறையில், தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்திற்கு எனது ஆழ்ந்த நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாயிருக்கிறேன். என்னுடைய நன்றியறிதலை எந்த முறையில் தெரிவித்துக் கொள்வது என்பது எனக்கே தெரியவில்லை. இருந்தாலும் எனக்கு அளித்திருக்கும் இந்த கௌரவம் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக்கும், இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதிக்கும் நான் இன்னும் கூடிய ஊக்கத்தோடு உழைப்பதற்கு ஒரு தூண்டு கோலாய் அமைந்திருக்கிறது என்று மாத்திரம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் 53 ஆண்டுகளிலும் உங்கள் சங்கம் இத்தகைய உயர் நிலை அடைவதற்காக சலியாது உழைத்து,காலத்திற்கேற்றவாறு அனுபவ சாத்தி யமான முறையில் தீர்க்க தரிசனத்துடனும் ஒழுங்காகவும் அதனைக்கொண்டு நடத்திய உங்கள் தலைவர்களின் தொண்டை எனக்கு ஒரு சிறந்த முன்மாதி ரியாக ஏற்றுக்கொள்ளக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதை நான் கருது

கின்றேன். தென்னிந்திய முஸ்லிம்களுக்கும், இலங்கை முஸ்லிம்களுக்கும் இடையே உள்ள கலாசாரத் தொடர்பை வளர்ப்பதற்கு என்னால் ஆன முயற்சிகள் அத்தனையையும் செய்ய முயல்வேன் என்று இந்த சந்தர்ப்பத் திலும் நான் உங்களுக்கு உறுதி கூறவிரும்புகின்றேன். இந்த முயற்சியில் தற்காலத் துரிதப் போக்குவரத்து முறைகளும், ஏனைய தொடர்புக்கான சாத னங்களும் மிகவும் உதவியாக அமையும். இத்துறையில் எம்மிருநாடுகளிலு முள்ள முஸ்லிம்களிடையே நிலவிவரும் பல்வேறு வகையான தொடர் புகளையும் பலப்படுத்துவதற்கு அறபுத் தமிழ் இலக்கியத்தை விட சிறந்த தோர் மார்க்கம் இருக்கமுடியாது. இன்றைய நிகழ்ச்சிகளில் பெரும் பகுதியை இத்தகைய இஸ்லாமிய இலக்கியத்தைப் பற்றி அறிவதில் நாம் செலவிடப் போகிறோம். தமிழ் நாட்டின் தலைசிறந்த முஸ்லிம் கவிஞர்களும் எழுத் தாளர்களும் எமக்களித்துச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்களைப் பற்றி எனக்குப் பின்னால் பேசவிருக்கின்ற அறிவாற்றல் மிக்க பேச்சாளர்கள் உங்களுக்கு எடுத்துரைப்பார்கள். அறபுத் தமிழ் இலக்கியம் போதிய அளவு போற்றப்படாமலும் மக்கள் மத்தியில் பரப்பப்படாமலும் இருந்து வருவது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். இதன் காரணமாக முஸ்லிம்கள் மத்தி யிலும் கூட அறபுத் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய அறிவு மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. இந்த அவல நிலைக்குக் காரணம் நாமேதாம். ஏனெனில் எமது இலக்கியத்தை நாமே தக்கவாறு போற்றாதிருக்கும் போது முஸ்லிம் அல்லாதார் அதனைப் போற்றுவர் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்? முஸ்லிம் புலவர்களும் எழுத்தாளர்களும் கடந்த காலங்களில் தமிழ் இலக்கியத்திற்கு மகத்தான தொண்டு புரிந்திருக்கின்றனராயினும் ஆரம்பகாலத்தில் அவர்கள் அறபு எழுத்திலேயே அவற்றை எழுதி வந்த காரணத்தால் முஸ்லிம் அல்லாதார் அவ்விலக்கியத்தைப் பற்றி அறியாதிருந்தனர். முஸ்லிம் இலக்கிய நூல்கள் தமிழ் எழுத்துக்களில் ஆக்கப்பட்ட காலத்திலும் கூட அவற்றுள் பெருவாரி யான அறபுப் பதங்களும் பார்ஸிப் பதங்களும் இடம் பெற்றமையால் முஸ்லிம் அல்லாதார் மத்தியிலே அவை செல்வாக்கைப் பெறவில்லை. மேலும் பெரும்பாலான இஸ்லாமிய இலக்கிய நூல்கள் மதத்தை முற்றிலும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தமையால் முஸ்லிம் அல்லாதாருக்கு அதில் சிரத்தை ஏற்படவில்லை. எனவே இந்தச் சூழ்நிலையில் அவர்கள் இஸ்லாமிய இலக்கியத்தில் கவனம் செலுத்தியிருக்க வேண்டுமென்றோ அல்லது விரிந்த தமிழ் இலக்கியப் பரப்பில் எம் இலக்கியத்திற்கு தக்கதோர் அந்தஸ்து அளித்திருக்க வேண்டுமென்றோ நாம் எதிர்பார்ப்பது பொருத்த முடையதாகாது. எமது இலக்கியத்தை நாமும் போற்றி பிறரும் அறியச் செய்யும் பொறுப்பு எம்முடையதேயாகும். இவ்வகையில் முஸ்லிம்களாகிய

நாம் - நானும் நீங்களும் உட்பட - பெரியதோர் தவறை இழைத்துவிட்டோம் என்று மீண்டும் குறிப்பிடுவதைப் பற்றி நீங்கள் வருத்தப்படமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

நாமே இழைத்துவிட்ட இத்தவறின் காரணமாக தமிழகராதியில் இடம் பெறவேண்டிய சில சொற்கள் இன்று அங்கு காணப்படவில்லை. தமிழிலக்கிய சரிதையில் காணப்படவேண்டிய பல பெரியார்களின் பெயர்கள் அங்கில்லை. முஸ்லிம்களுக்கே சிறப்பாகவும் ஆனால் பொதுத் தன்மையுடையனவாகவும் அமைந்துள்ள பல அரிய கருத்துக்களும், கொள்கைகளும் தமிழிலக்கிய அரங்கிலே அவற்றுக்குரிய இடம் பெறாதுபோயின. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் நம்முடைய நிலைமையைப் பற்றிச் சிந்தனை செய்து எம்மி டையுள்ள குறைகளை நீக்குவதற்கு வழிகாணுதல் அவசியமாகும்.

இங்கு நாம் சில கேள்விகளை எம்மிடையே கேட்டுக்கொள்ள வேண்டி யவர்களாக இருக்கின்றோம். இதுகாறும் நாம் நமது சரித்திர சம்பந்தமான உண்மைகளை நுட்பமாக ஆராய்ந்து வெளியிட்டுள்ளோமா? முஸ்லிம்களால் ஆக்கப்பட்டுள்ள நூல்களை தகுந்தமுறையில் விரிவுரைகளுடன் பிரசுரித் துள்ளோமா? எமது பெரியார்களின் வாழ்க்கைச் சரித்திரங்களை சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சியுடனும், ஆதாரத்துடனும் வழங்கியுள்ளோமா? ஆராய்ச்சிக் கூடங்கள் அமைத்துள்ளோமா? எமது கலைஞர்களின் இலக்கிய மேதைகளின், பிறந்த தினங்களை ஞாபகப்படுத்தித் தக்கவாறு கொண்டாடியிருக்கின் றோமா? இவற்றுள் எதையும் செவ்வனே நாம் இதுவரை செய்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்த நிலை மாற நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள் என்ன என்பதைப்பற்றி நான் பின்னர் சில வார்த்தைகள் கூறுவேன். இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பள்ளிக்குச் செல்லும் நமது மாண வர்கள் உமறு தந்த உயர்காவியமாம் சீறாப்புராணத்தை, காசீம் புலவர் தந்த கருத்துக்கினிய திருப்புகழை, இராசநாயகத்தை, முதுமொழி மாலையை, நாகையந் தாதியைக் கூடப் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப் பட்டில்லை என்பதனைச் சிந்திக்கும் பொழுது நம்முடைய கவனயீனம் எவ்வளவு பெரும் தீங்கு நமக்கு விளைவித்துவிட்டிருக்கின்றது என்பதை நாம் உணர்கிறோம்.

இன்று கலாசாலைகளில் பயின்றுவரும் மாணவர்களில் இறுதி வகுப்பில் உள்ளவர்களாகிய முஸ்லிம் சிறார்கள் அதிலும் தமிழில் நல்ல பாண்டித்தியம் உடையவர்களுக்கும் கூட அறபுத் தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, தமிழுக்கு முஸ்லிம்கள் ஆற்றியுள்ள தொண்டைப்பற்றியோ, தமிழ் இலக்கியம் அறபுப் பதங்களின் கலப்பினாலும் இஸ்லாமியக் கருத்துக்களினாலும் எவ்வாறு மேம்பாடடைந்திருக்கிறதென்பதைப் பற்றியோ ஞானமில்லாதவர்களாகவே

இருந்துவருவதைக் காண்கின்றோம் என்றால் அது நாம் இழைத்து விட்ட தவறின் தன்மையையே எடுத்துக்காட்டுவதாய் இருக்கின்றது.

எனவே, இந்த அவலநிலை மாற்றப்பட வேண்டுமென இந்த மேடை யிலிருந்து நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். இந்தத் திருப்பணியை உங்கள் கல்விச்சங்கமும் நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் இலங்கை முஸ்லிம் கல்விச் சகாயநிதியும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியும் எடுத்து நடத்துதல் பொருத்தமுடையதாகும். இவ்வழியில் நம்முடைய இந்த ஸ்தாபனங்கள் தங்களுடைய நோக்கங்களை விசாலப்படுத்தி பள்ளி மாணவர்களுக்கெனப் புத்தகங்களைப் பிரசுரித்தல், இஸ்லாமிய அடிப்படையில் பாடப்புத்தகங்களை ஆக்குதல், அதற்கு சாதகமாக தமிழுக்கு நல்ல தொண்டாற்றியிருக்கும் பழங்கால அறபுத் தமிழ் இலக்கியத்தையும் இன்று பெருகிவரும் நவீன முஸ்லிம் இலக்கியத்தையும் தகுந்த முறையில் உபயோகித்துக்கொள்ளல் ஆகிய காரியங்களில் ஈடுபடுவது அவசியத்திலும் அவசியமாகும். இத்துறை யில் சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் நெயினார் அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்திவருவதாக நான் அறிகிறேன். மேலும், திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் இன்று உங்கள் மத்தியில் பேச இருப்பவருமான எனது நண்பர் ஜனாப் கா. அப்துல் கபூர் அவர்களும் முயற்சிகள் பல செய்து வருவதை அறிந்து மகிழ்வடைகிறேன். என்றாலும் இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களாகிய நாங்கள் ஒருபடி முன்னேறி விட்டோம் என்பதையும் பெருமிதத்துடன் உங்களுக்கு எடுத்துக்காட்ட ஆசைப் படுகிறேன். அதாவது, எங்களது இலங்கை முஸ்லிம் கல்விச்சகாய நிதியின் ஆதரவு பெற்று முஹம்மது உவைஸ் என்ற முஸ்லிம் மாணவர் ஒருவர் அறபுத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு ‘முஸ்லிம் கொன்றிபியூசன் ரு தமிழ் லிற்றேட்சர்’ என்ற ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி அதன் காரணமாக இலங்கை சர்வகலாசாலையிடமிருந்து எம்.ஏ.பட்டத்தையும் பெற்றுக்கொண்டு விட்டார். புத்தக வடிவில் தற்போது வெளிவந்திருக்கும் அந்த ஆராய்ச்சிக் கட்டுரை பரிபூரணமான ஒன்று என நான் சொல்லத் துணியாவிட்டாலும் இத்துறையில் செய்யப்பட்ட முதல் முயற்சியும் வழிகாட்டியுமாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் ஆதரவு பெறத்தக்க பல பெரு நூல்கள் தகுதியுடையோரால் இயற்றப்பட்டு வெளிவரல் வேண்டும் என நான் பெரிதும் விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அறபுத் தமிழ் இலக்கியம் என்றால் அது பழங் காலத்தைச் சேர்ந்தது; முஸ்லிம் கவிஞர்களும் எழுத்தாளர்களும் பழங்காலத்தைச் சேர்ந்தவர்கள்; அவை சரித்திர ஆசிரியர்களினதும் ஆராய்ச்சியாளர்களினதும் கவனத்திற்கே உரித்தானதென்று எண்ணி விடுதல் கூடாது. அறபுத்தமிழ்

இலக்கியம் பழங்காலத்தை மாத்திரம் சார்ந்ததாய் இல்லாமல் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பொறுத்ததாகும் என்பதுடன் அது ஜீவனோடு கூடி வளர்ந்து வரும் ஒன்றாகவும், சென்ற காலங்களில் இஸ்லாமியத் தத்துவங்கள், எண்ணங்கள் வாழ்க்கை வழிகள் ஆகிய இரத்தினங்களைத் தமிழ் உலகிற்கு வாரி வழங்கி இருப்பதைப் போன்று வருங்காலங்களில் இன்னும் பன் மடங்காக அச்சேவையில் ஈடுபட்டு முன்னேற வேண்டிய ஒன்றாகவும் இருந்து கொண்டிருக்கிறதென்பதை நன்கு ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாய் இன்று உலகம் அடைந்துள்ள கல்வியறிவூட்டும் படக்காட்சிகள், ஒலிபரப்புச் சாதனங்கள், பத்திரிகைகள், இலக்கிய மறுமலர்ச்சி நடை, குழந்தை உள்ளங்களைப் பக்குவப்படுத்தும் துறையில் கையாளப்படும் முறைகள் ஆகிய சகல சாதனங்களையும் முஸ்லிம் இலக்கிய வளர்ச்சிக்குச் சாதாரணமாக நாம் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் என்றும் வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

அறபுத் தமிழ் இலக்கியம் ஜீவனோடு கூடி வளர்ந்துவருமொன்று என்று நாம் பெருமிதத்தோடு உணரவேண்டுமென முன்னமேயே கூறினேன். அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பெருமானார் நபியே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்க்கை வரலாறு ‘இரத்தின முகம்மது காரணச் சரித்திரமாய்’ தோன்றி, பெரியார் தாவுத்ஷா அவர்களின் ‘நாயக மான்மிய’ மாய் மாறி, இன்று மீண்டும் கபூர் அவர்களின் ‘நாயகமே’ என்ற வெளியீட்டில் தாலாட்டு ரூபத்தில் வெளிவந்திருப்பதொன்றை மாத்திரம் நோக்குமிடத்து, காலப்போக்கின் காரணமாய் ஏற்பட்டு வந்திருக்கும் மாறுதல்களையும் மறுமலர்ச்சிகளையும் நாம் முற்றாகப் புறக்கணித்துவிடவில்லை என்பது புலனாகும்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் தற்கால அறபுத் தமிழ் இலக்கிய உலகில் உரைநடை எழுத்துக்குத் தந்தையேபோல் விளங்கும் சென்னை தாருல் இஸ்லாம் பத்திரிகையாசிரியரான ஜனாப் பா. தாவுத்ஷா அவர்கள் பொதுவாக இலக்கிய உலகிலும் குறிப்பாக பத்திரிகை உலகிலும் ஏற்படுத்திவிட்டிருக்கும் மறுமலர்ச்சியைப்பற்றி குறிப்பிடாதிருக்க முடியாது. அவர்களின் சாதனையும் அடைந்துள்ள வெற்றியும் போற்றுதற்குரியதாகும்.

தமிழ் இலக்கிய உலகில் சுப்பிரமணிய பாரதியார், நாமக்கல் கவிஞர், தேசிகவிநாயகம்பிள்ளை, கல்கி, ஆர்.பி. சேதுப்பிள்ளை, பாரதிதாசன் போன்ற பிரபல தமிழர்களாகிய கவிஞர்களும் உரைநடை எழுத்தாளர்களும் உண்டு பண்ணி விட்டிருக்கும் மறுமலர்ச்சியும் புதுமையும் முஸ்லிம்களையும் ஓரளவிற்கு கவர்ந்துவிட்டதென்றே கூறலாம். அந்த நற்பயன் காரணமாக இன்று நம் மத்தியிலே ஆர்.பி. எம்.கனி, அப்துல் ரஹீம், அப்துஸ் ஸமத்,

அப்துல் வஹாப் போன்ற இளம் எழுத்தாளர்களையும் எண்ணற்ற இளம் கவிஞர்கள் பலரையும் காண்கின்றோம்.

இவ்விடத்தில் சமீபத்தில் காலஞ்சென்ற மகாமதி சதாவதானி முத்தமிழ்ச் சாகரம் கா.ப.செய்குத்தம்பி பாவலர், மன்னார்குடி யூசுப் பாவலர், மதுரை நூறுல் ஹக் ஆசிரியர் வித்துவான் ம.கா.மு.காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர் போன்றவர்களையும் குறிப்பிடாதிருக்க முடியாது. இவர்கள் அறபுத் தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய, இன்றும் ஆற்றிக்கொண்டிருக்கின்ற சேவை மகத் தானது. செய்குத்தம்பி பாவலர் அவர்களைப்பற்றி அரிய கருத்துரை ஒன்றை இன்று நீங்கள் விரைவிலேயே கேட்க இருக்கின்றீர்கள். இப்பெரியார்களின் தொண்டுகள் இஸ்லாமிய அடிப்படையின்மீதுள்ள ஆர்வத்தின் காரணமாய் எழுந்ததாயிருப்பினும் அவர்களின் பாக்களும் உரைநடை எழுத்துக்களும் முஸ்லிம் அல்லாதாரும் படித்துணரக்கூடியவையாய் அமைந்து இருப்பது நோக்கற்பாலது.

சமீப காலத்தில் வெளிவந்துள்ள ஜனாப். அப்துல் ஹமீத் பாகவிய வர்களின் திருக்குர் ஆன் தமிழ் மொழிப்பெயர்ப்பு இஸ்லாமிய இலக்கிய உலகில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பியிருப்பதுடன் முஸ்லிம் அல்லாதார் மத்தியிலே, அவர்களுக்கும் திருக்குர்ஆனுக்குமிடையே, நேரடித் தொடர்பை ஏற்படுத்திவைக்க ஒரு சிறந்த சாதனமாகவும் அமைந்திருக்கும் தன்மையால் மிகமிகப் போற்றுதற்குரியதொன்றாகும்.

நான் மேலே எடுத்துக்காட்டியுள்ள முஸ்லிம் பெரியார்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியவர்களின் கைங்கரியங்கள் இந்நாட்டு முஸ்லிம்களோடு இலங்கை முஸ்லிம்களுக்குள்ள தொடர்பை மேலும் பலப்படுத்துவனவாய் அமைந்திருக்கின்றன. தமிழ் இலக்கியம் சிறப்பும் தொன்மையும் வாய்ந்ததாய் இருப்பதுடன் புதுமையும் புகுந்ததாய் உள்ளது. அந்தச் சீரும் சிறப்பும், செழுமையும் வாய்ந்துள்ள தமிழுக்கு முஸ்லிம்களாகிய நாமும் நம்முடைய பங்கைக் கொடுத்து இன்னும் பன்மடங்கு சிறப்படையச் செய்ய முயல்வது நமக்கே பெருமை அளிப்பதாகும். நம்முடைய இந்தப் பணியை முஸ்லிம் அல்லாதாரும் வரவேற்று ஆதரவளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், நம்முடைய உதவியால் அறபு, பார்ஸி மொழிகளில் உள்ள அரும்பதங்கள் பலவற்றால் தமிழை வளம்பெறச் செய்வதோடு கடந்த காலங்களில் ஏனையோரால் கவனிக்கப்படாமலும், தற்பொழுது பலரும் ஏற்றுக் கொண்டும் வருவதுமான, உலக நாகரிகத்தையே வளப்படுத்தி உருவாக்கிய உயர்ந்த இஸ்லாமியக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் கூட தமிழுக்கு நாம் வழங்க முடியும்.

இங்கே ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதாவது, நாம் வாழ்ந்துவரும் இக்காலம், நூற்றுக்கு நூறு பங்கு இலக்கியத்துறையில், நவீனங்கள், சிறுகதைகள், சரிதைகள், மக்கள் மனதைக் கவரும் எளிய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவைகளைக் கொண்ட சஞ்சிகைகள் வடிவில் மக்களையாட் கொண்டிருக்கும் காலமாக இருந்துவருவதேயாகும். இத்துறையிலும் நாம் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விடாது தகுந்தவாறு முயன்று இஸ்லாமிய கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட பல சஞ்சிகைகளை வெளியிட்டு மக்கள் பயன்பெற உதவவேண்டும். இத்துறையில் ‘மணி விளக்கு’ச் செய்துவரும் மதிப்புக்குரிய சேவையைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். இவ்வகையில் எவ்விதத் தங்குதடையு மின்றியும் சிரமத்தைப் பொருட்படுத்தாமலும் இந்நாட்டு முஸ்லிம்களும் இலங்கை முஸ்லிம்களும் ஈடுபடுதல் வேண்டும் என்று மட்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இவ்வாறு செய்வதால் அறபுத் தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதோடு மாத்திரமன்றி பொதுவாக தமிழ் இலக்கியச் செல்வத்தைப் பெருக்கியவர்களாகவும் ஆவோம். உமறுப் புலவருக்கு கொடை வள்ளல் சீதக்காதி உறுதுணையாய் அமைந்திருந்தது போன்ற காலம் அன்று இது. அரசர்களும் தனவந்தர்களும் தனிப்பட்ட முறையில் புலவர் பெருமக்களைப் போற்றி ஆதரித்து வந்த காலம் மாறிவிட்டது. சனநாயகத்துவம் மேலோங்கி ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுகள் குறைந்து, வருமானவரியும் அதற்கு மேற்பட்ட வரியும் தலைதூக்கி நிற்கின்ற இந்தக் காலத்தில் அத்தகைய வள்ளல்களை நாம் எதிர்பார்ப்பதும் பொருத்தமுடையதாகாது. புலவோரைப் போற்றிப் பேணும் தொண்டு முன்னர் தனிமனிதர்களைச் சார்ந்திருந்த நிலை மாறி, இன்று பொதுமக்களின் பொறுப்பாக இருந்துவருகிறது. அது மாத்திர மல்ல, தற்கால இலக்கியமும்கூட மக்கள் இலக்கியமாகவே மிளிர்ந்து வருகிறது.

பொதுவாக தனிப்பட்ட புத்தகப் பதிப்பாளர்கள் தங்கள் சொந்த வருமானத்தைக் கருதியும் மக்களாதரவை நம்பியும் எழுத்தாளர்களுக்கு ஆதரவளிக்க முன்வரலாமென எதிர்பார்க்கலாம். இருந்தாலும் முஸ்லிம் களைப் பொறுத்தவரையில் அதுவும்கூடச் சாத்தியமற்றதாகவே காணப் படுகிறது. ஏனெனில் அறபுத் தமிழிலக்கியத்திற்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் பொது மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது. தென்னிந்தியாவிலுள்ள சற்றேறக்குறைய முப்பது இலட்சம் முஸ்லிம்களும் இலங்கையிலுள்ள ஐந்து இலட்சம் முஸ்லிம்களுமே அறபுத் தமிழிலக்கியத்திற்கு ஆதரவளிக்கவேண்டி யவர்களாய் உள்ளனர். இவர்களும் கூட பொருளாதாரத் துறையில் மிகுந்த சுபீட்ச நிலையில் இல்லை. இந்த நிலைதான் தனிப்பட்ட புத்தகப் பதிப்

பாளர்கள் இம்முயற்சியில் ஈடுபடுவதற்குத் தடையாக இருந்துவருகிறது. எனினும் அறபுத் தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பிக்காமலும் நாம் இருக்க முடியாது. அவ்வாறு அயர்ந்து இருப்பது நம்முடைய கலாசார வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் இடையூறு விளைவிப்பதோடு எமது தனிப்பட்ட பண் பாட்டை நாம் இழக்கவும் காரணமாகும். ஆகவேதான் உறுதியான முறையில் அமைக்கப்பட்டு, ஒழுங்காகவும், முன்னோக்குடனும் நடத்தப்பட்டு வரும் நமது சங்கங்கள் இத்துறையில் ஈடுபட்டு சிறுவர் முதல் வாலிபர் வயோதிபர் வரை சகலருக்கும் தேவையான அறபுத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

உங்கள் சங்கத்தின் சட்டதிட்டங்கள் இத்தகைய முயற்சிக்கு இடந்தரா விடில் அதற்கெனப் பிரத்தியேகமான சங்கத்தையோ அல்லது சங்கங்களையோ உடனடியாக நிறுவவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இலங்கை முஸ்லிம் களாகிய நாங்கள் எண்ணிக்கையில் மிகக்குறைவானவர்கள். ஆகையினால் இத்துறையில் தென்னிந்திய முஸ்லிம் சகோதரர்களாகிய நீங்கள் எங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டுமென்று வேண்டுகிறேன். இந்த மகத்தான சேவைக்கு இலங்கை முஸ்லிம்களாகிய நாங்கள் எங்களால் ஆன ஒத்துழைப் பைத் தர முயல்வோம் என தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். நம் இருநாட்டு முஸ்லிம்களுக்கிடையேயுள்ள உறவுகளுக்கும் நட்புக்கும் ஒற்றுமைக்கும் சின்னமாய் அமையக்கூடிய பொதுப்பணி இதை விட வேறொன்றிருக்க முடியாது. இப்பணி நம் இருதரத்தாருக்கும் பரஸ்பர நன்மைகளை இன்றும் என்றும் தந்து எமது சொந்த கலாசாரத்தைப் பேணு வதற்கும் உதவுவதாய் இருக்கும்.

இறுதியாக எனக்கு நீங்கள் அளித்துள்ள கௌரவத்திற்கு எனது நன்றி யறிதலை மீண்டும் தெரிவித்துக்கொள்வதோடு, உங்கள் சங்கமும் அதன் தலைவர்களும் கல்வித்துறையில் ஆற்றிவரும் பெருஞ்சேவை எல்லா முஸ்லிம்களுக்கும் சிறந்ததோர் தூண்டுகோலாய் அமைந்துள்ளதென்பதை மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதுடன் எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன். அஸ்ஸலாமு அலைக்கும்.

- 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற
தென்னிந்திய முஸ்லிம் கல்விக் கழகத்தின் இரண்டாம் நாள்
கருத்தரங்கில் ஆற்றிய தலைமையுரை

- இலங்கையில் இஸ்லாம் ப: 147 - 167

# 2

# அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் - 2

உங்களது இந்த இலக்கிய விழாவுக்கு ஆசிச் செய்தியும் கட்டுரையும் அனுப்ப எனக்கு வாய்ப்பளித்தமைக்காக விழாவை ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றி கூறுகிறேன். கட்டுரையை என் ஆசிச் செய்தியின் வாசகத்துடன் ஆரம்பிக்க விரும்புகிறேன்.

''இலங்கை முஸ்லிம்களின் காழ்ப் பூமியெனக் கணிக்கத்தக்க கல்முனைப் பகுதியில் அமைந்துள்ள மருதமுனைக் கிராமத்தில் 1966 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆந் திகதி நடைபெறவிருக்கும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய விழாவுக்கு இந்த ஆசிச் செய்தியினை அனுப்புவதில் அடங்கொணா மகிழ்ச்சி யடைகிறேன். இவ்விழா பொருத்தமான காலம், இடம், சூழல், சந்தர்ப்பம் ஆகியவற்றில் நடைபெறுகிறது.

மரபு காக்காத மனித குலம் தனது பண்பையும், மேம்பாட்டையும் இழந்துவிடும் என்பது வரலாறு காட்டும் படிப்பினை. இதை நமது மூதாதை யர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆகவேதான் நமது தனித்தன்மையைப் பேணும் வகையில் தமக்கென ஓர் இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக் கினார்கள். அதுவே அறபுத் தமிழ் இலக்கியம்-இஸ்லாமியத் தமிழ் இலக்கியம். இன்று நம்மிற்பலர் இந்த இலக்கியச் செல்வத்தின் மாட்சியை அறியாது வாழ்கிறார்கள். மற்றவர்கள் அறிந்தும் அறியாதவர்கள் போலப் பாவனை செய்கிறார்கள். இந்நிலைமை உண்டானமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றை விளக்க இது சந்தர்ப்பமன்று.

ஆழ்ந்த புலமை படைத்த சின்ன ஆலிம் அப்பா போன்ற முஸ்லிம் சான்றோர்களைத் தோற்றுவித்த பெருமை மருதமுனைக்குண்டு. யுத்த அவசர காலத்தில் மருதமுனை மக்கள் மத்தியில் வாழ்ந்த நான், அந்த மண்ணில் இவ்விழா நடைபெறுவதையிட்டு இரு மடங்கு உவகை அடைகிறேன். விழா இனிது நிறைவேற அல்லா ஹுத்தஆலா - எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக; ஆமீன்.

எனது ''இலங்கையில் இஸ்லாம்'' என்னும் நூலின் 20 ஆம் அதிகாரத்தில் அறபுத் தமிழின் ஓர் அம்சத்தினை - இலங்கை முஸ்லிம்களையும் தென்னிந்திய முஸ்லிம்களையும் இணைக்கும் பாலமாக அறபுத் தமிழ் விளங்குகின்ற தென்பதை - தெளிவாக விளக்கியிருக்கிறேன். இதேயளவு முக்கியத் துவமுள்ள வேறு அம்சங்களும் உள்ளன. இஸ்லாத்துக்கும் தமிழுக்கும் உண்டான இணைப்பு, இவ்வறபுத் தமிழ் இணைப்பின் மூலமாக இந்த முஸ்லிம்களின் அறபுப் பூர்வீகத் தொடர்பு அற்றுப் போகாதிருந்தமை, முஸ்லிம் உலகத்துடன் குறிப்பாக, அறபு (அல்லது பாரசீக) குடாக் கரையோ ரங்களில் அமைந்த நாடுகளுடன் இருந்த வரலாற்று, பண்பாட்டுத் தொடர்புகள் ஆதியன மேற்குறித்த பிற அம்சங்களுள் ஒரு சிலவாகும்.

அதே அதிகாரத்தில் மற்றுமோர் அம்சம் பற்றியும் எழுதியிருக்கிறேன். தமிழ் அகராதிகளிலும், தமிழ் இலக்கியம் பற்றிய நூல்களிலும் இந்த அறபுத் தமிழ் புறக்கணிக்கப்பட்டமைக்கும் தென்னிந்திய முஸ்லிம்களும் இலங்கை முஸ்லிம்களாகிய நாமும் பொறுப்பேற்க வேண்டுமென்பதே அது.

இங்கிலிஷைச் சிறப்புப் பாடமாகக் கற்காத பட்டதாரி சோஸரின் நூல்களையும், வில்லியம் லாங்டன் என்பாரின் நூல்களையும் கலாநிதிப் பட்டம் பெற முனையும் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு மட்டுமே பிரயோசனமுள்ள பழைய நூல்களெனக் கருதுவதைப் போல, நம் மிற் சிலர் அறபுத் தமிழைக் கருதுகிறார்கள். இந்தக் கருத்து விசனிக்கத்தக்கது; ஆபத்தானது. ஏனென்றால், இலங்கை முஸ்லிம்களாகிய நாம் அறபுத் தமிழை விவேகமாக, ஆய்ந்தோய்ந்து பார்த்துப் புனருத்தாரணம் செய்யாவிட்டால் ஆக்க இலக்கியத் துறையில் பயனுள்ள தனித்தன்மை வாய்ந்த நூல் எதையும் தோற்றுவித்தல் முடியாததாகிவிடும். அத்தகைய சூழலில் நம்மிடையே உண்மைக் கவிஞர்கள் தோன்றார்; கல்லடுக்கும் கொத்தனார் போல வெறுஞ் சொல்லடுக்கும் சோதாக் கவிஞர்களே தோன்றுவர். முஸ்லிம் பெயர்கள் பூண்டிருப்பினும் இஸ்லாமிய வாழ்க்கை முறையையோ கலாசாரத்தையோ பிரதிபலிக்காத இலக்கியங்களே நம் மத்தியிற் பிறக்கும். எனவே, இந்த விழா இலங்கை முஸ்லிம்கள் அனைவருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விழாவாக விளங்குகிறது. இதற்காக இவ்விழாவை ஏற்பாடு செய்தவர்களை நாம் அனைவரும் போற்றிப் பாராட்டுதல் வேண்டும்.

''இலங்கையில் இஸ்லாம்'' என்ற எனது புத்தகத்தின் நூன்முகத்தில் (1) ஒலிக்குறிப்பு ஒருமைப்பாடு (2) அறபுத் தமிழ் அகராதி (3) அறபுத் தமிழ் இலக்கியக் கோவை ஆதியன எமது அத்தியாவசியத் தேவைகளென்று விவரித்திருக்கிறேன். இவற்றோடு வேறு சிலவற்றையுஞ் சேர்த்து எனது கருத்தை மேலும் விரிவுபடுத்து முன்னர் ஒரு விஷயத்தைச் சொல்லிக்

கொள்ள விரும்புகிறேன். எனது கருத்துக்களில் பிழை ஏதும் இருக்கலாம்; இத்துறையில் அதிக ஈடுபாடுடையவர்கள் அவற்றைக் கண்டுபிடித்து எனக்குத் தெரிவித்தார்களானால் நான் மகிழ்ச்சியுடன் அவற்றை ஏற்றுக்கொள்வேன். அறபுத் தமிழ் சம்பந்தமாக கணிசமானளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், அறபுத் தமிழின் வரலாறு, மொழியியல் அம்சங்கள் ஆதியன கவனிக்கப்படாதிருக்கின்றன.

அறபுத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் வீழ்ச்சியும் தளர்ச்சியும் ஆகிய அம்சங்கள் பற்றி அற்ப சொற்ப தகவல்களே இன்று எமக்குக் கிடைக்கின்றன. அறபுத் தமிழை ஸ்திரமான முறையில் மீண்டும் அரியாசனத்திலிருத்த வேண்டுமானால், அதன் பிறப்பு வளர்ப்பையோ இக் காலத்திலும் இதற்கு முந்திய தசாப்தங்களிலும் அது நலிந்து மெலிந்தமைக்கான ஏதுக்களையோ புறக்கணிக்கலாகாது. ஒரு வகையில் இலக்கியச் சிறப்பம்சங்களை ஆராய் வதிலும் இவ்வம்சங்கள் முக்கியமானவை.

வரலாற்று ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் பார்க்குமிடத்து முதன் முதலில் தோன்றிய அறபுத் தமிழ்க் கையெழுத்துப் பிரதி எது, அதன் வாசகம் என்னவென்றெல்லாம் அறுதியிட்டுச் சொல்வது சாத்தியமன்று. அந்த மூலப்பிரதி ஒரு காலத்தில் நம்மை ஆண்ட ஐரோப்பிய வல்லரசு களின் தலைப் பட்டனமொன்றிலே அமைந்த தொல் நூல்சாலையில், தேடுவாரற்றும் படிப்பாரற்றும் இருக்கக் கூடும். ஏனெனில் அறபுமொழி வல்லுனர் கையில் அது கிடைத்தால் எழுத்துக்களை அவர் வாசிப்பார். ஆனால் சாராம்சம் தமிழ் என்பதால் அதன் கருத்தை விளங்கிக் கொள்ளார். திராவிட மொழி வல்லுனருக்கும் இதே இடர்ப்பாடு நேரும். பார்ப்பதற்கு அறபாகவும் படிப்பதற்குத் தமிழாகவும் இருக்கும் அப்பிரதி இந்த இரு வல்லுனர்களையும் மலைக்கச் செய்து விடும். எனினும் அறபுத் தமிழ் மூல மாக உலகில் மாபெரும் தொல் இனங்களில் இரண்டாகிய செமிற்றிக் இன மும் திராவிட இனமும் சங்கமமானவை வரலாற்று முக்கியத்துவமற்றதன்று. இம்முக்கியத்துவத்தை அறபு, தமிழ் ஆகிய இரு மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியுமுள்ள இலங்கை முஸ்லிம் எவரேனும் ஆராய்ந்து வெளியிடு வாரென எதிர்பார்ப்போமாக! இந்தச் சந்தர்ப்பத்தில் நுகேகொடையில் உள்ள எமது தொல் நூற்சாலையில் நான் கண்ட அறபுத் தமிழ் வாரப் பத்திரிகைப் பிரதிகள் பற்றிச் சொல்வது பொருத்தம். கஷ்ஃபுல்றான் அன் கல்பில் ஜான் என்பது அப் பத்திரிகையின் பெயர். 1889 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வாரப் பத்திரிகை சித்திரக் கையெழுத்தில் அழகாக எழுதப்பட்டு கல்லச்சு மூலம் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அறபுச் சித்திரக் கையெழுத்துக்

கலைக்கு நம் நாட்டில் மதிப்பு அருகிவரும் இக் காலத்து நிலைபரத்தோடு ஒப்பிடுகையில் மேற்படி கையெழுத்து மணி மணியாக இலங்குகிறது.

8 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் வழக்கிலிருந்த அறபுத் தமிழ்ச் சுவடிகளை உலகெங்குமுள்ள தொல் பொருட் காட்சிச்சாலைகளில் தேடி, விஞ்ஞான முறைப்படி வகைப்படுத்தி காலக் கிரமமான சரித்திரப் பின்னணியில் நோக்கினால் அறபுத் தமிழின் தோற்றம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளலாம். ஆனால், இத்தகைய ஒரு பணி எத்துணை சிரமமானதென்பது சொல்லாமலே விளங்கும்.

அறபுத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் இன்னொன்றையும் கவனித்தல் வேண்டும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மட்டுமே பிரத்தியேகமான தொன்றாக இந்த மொழி பரிணாம வளர்ச்சியைக் கருதலாகாது. மத்திய காலத்தில் இஸ்லாமும் இஸ்லாமிய நாகரிகமும் உலகமெல்லாம் கிளைத்துப் படர்ந்தபோது, அறபு மொழியும் கூடவே பரவலாயிற்று. இந்த வகையில் அறபுத் தமிழுக்கும் ஸ்வாஹிலி மொழிக்கும் நெருங்கிய ஒற்றுமைகளைக் காணலாம். கிழக்காபிரிக்காவைச் சேர்ந்த கறுப்பின மக்கள் இஸ்லாத்தைத் தழுவியதன் பயனாகத் தோன்றிய ஸ்வாஹிலி மொழி இன்று தன்ஸானிய நாட்டின் உத்தியோக மொழியாக விளங்குகிறது. அறபு லிபியில் எழுதப்பட்ட இம்மொழி பிரிட்டிஷ்காரரின் ஆட்சிக் காலம் முதல் ரோமன் லிபியில் எழுதப்படுகிறது. துபாஷி, வங்காளம், சிந்தி, மலாய், மஹல்ல தீவு மொழி ஆகியவற்றுக்கும் அறபுத் தமிழுக்கும் பொதுவான சிறப்பம்சங்கள் பல. மலாய் மொழி றோமன் லிபியிலும் எழுதப்படுகிறது. அறபு லிபியிலும் எழுதப்படுகிறது. றோமன் லிபி மலாய், இன்றைய மலேசியாவில் உத்தியோக மொழியாக விளங்குகிறது. ஆயினும் இன்று கூட, அறபு லிபி மலாய் மொழியில் அங்கு பத்திரிகைகள் வெளிவருகின்றன. இம் மொழி வெகு ஜன வழக்கில் ஜாவி என அழைக்கப்படுகிறது. மேற்சொன்ன எல்லா மொழி களிலுமுள்ள மத்திய கால இலக்கியங்களை ஒப்பு நோக்கிப் பார்த்தால் அக்காலத்தில் இஸ்லாமிய கலாசாரமும் நாகரிகமும் எத்துணை செல்வாக் குடன் திகழ்ந்தனவென்பதைக் காணலாம்.

அறபுத் தமிழ் ஒரு மொழியா? கிளை மொழியா? ஓர் இலக்கிய நடையா? இதுபற்றி அறிவியல் முறையிலோ மொழியியல் அடிப்படையிலோ ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இது விஷயத்திலும் என் கருத்துத் தவறாயிருக்கலாம். தவறென்று எவரேனும் சுட்டிக் காட்டினால் நன்றியுடையவனாயிருப்பேன். தமிழ் இலக்கணம் தவிர தனக்கென வேறாக இலக்கணம் இல்லாமையால் அதனை ஒரு தனி மொழியென்று கொள்வது சாத்தியமன்று. ஆனால் மறுபுறத்தில் பார்த்தால், பிரிட்டிஷ் இங்கிலிஷுக்கும்

அமெரிக்க இங்கிலிஷுக்கும் உள்ளதிலும் அதிக வேறுபாடு தமிழுக்கும் அறபுத் தமிழுக்கும் உண்டு. எனவே கிளை மொழி என்னும் ஸ்தானத்தை நாம் அதற்குத் தங்கு தடையின்றி அளிக்கலாம். இதனைப் பேசிய மக்கள் குழுவினர் மலையாள மொழி உருவான காலத்தில் வாழ்ந்தவர்களைப் போல இடவாரியாகப் பிரிந்திருக்கவில்லை. மதவாரியாக இணைந்திருந்தனர். மலையாளம் காலகதியில் ஒரு தனி மொழியாகப் பரிணமித்தது. அறபுத் தமிழ் அத்தகைய தனிமொழி அந்தஸ்தை அடையவில்லை. அறபுத் தமிழ் நடை மணிப்பிரவாள நடையைப் போன்ற இலக்கிய நடை என்பதில் ஐயமில்லை. மணிப்பிரவாளம் சமஸ்கிருத ஒலிகளைத் தமிழில் புகுத்தியதும் அல்லாமல் தமிழுக்கு ஒரு சில அட்சரங்களையும் கிரந்த எழுத்துக்களையும் கொடுத்துதவியது போலவே, அறபுத் தமிழும் அறபு ஓசைகளாலும் இலக்கிய நடையாலும் தமிழுக்குச் செழிப்புத் தேடிக் கொடுத்தது.

19 ஆம் நூற்றாண்டில் நூல்களை அச்சிடும் நடைமுறை பிரபல மடைந்ததும் அதுகாலவரை அறபு லிபியில் எழுதப்பட்டு வந்த அறபுத் தமிழ் தமிழ் லிபிக்கு மாறியதெனலாம். அறபுத் தமிழ் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றி அண்மையில் வெளிவந்திருக்கும் நூல்களெல்லாம் 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே பெரும்பாலும் தமது ஆராய்ச்சியைத் தொடங்கு வதற்கு இதுவே காரணம் போலும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றும் நினைவு கூரத்தக்கது. 15-18 ஆம் நூற்றாண்டு வரையான காலப் பிரிவில் இலங்கை முஸ்லிம்கள் போர்த்துக் கேயராலும் ஒல்லாந்தராலும் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தார்கள். இதே காலப் பிரிவில் இந்தியா முகலாய ஆட்சிக்குட்பட்டிருந்தது. தென் இந்தியாவின் சில பகுதிகள் நவாபுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. தென்னிந்திய முஸ்லிம் களின் வரலாற்றிலும் காணப்படும் இந்த வித்தியாசத்தின் விளைவாக இவ்விரு பகுதிகளில் வழங்கிய அறபுத் தமிழிலும் சிற்சில மாறுபாடுகள் உண்டாயின. இந்திய முஸ்லிம்கள் மத்தியில் பெருமளவான பார்ஸி, உருது, ஹிந்துஸ்தானிச் சொற்கள் வந்து சேர்ந்ததைப் போல இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வந்து சேரவில்லை.

அச்சுவாகனமேற்றிய புத்தகங்கள் கையடக்கமாயிருந்தபடியால் மக்கள் அவற்றுக்கு அமோக வரவேற்பளித்தார்கள். அறபு லிபியில் எழுதப்பெற்ற அறபுத் தமிழ், தமிழ் லிபிக்கு மாறியமைக்கு அச்சு வாகனத்தின் வருகையும் முக்கிய காரணமாயிருக்கலாம். ஆனால், இந்த மாற்றம் எப்பொழுது சம்பவித்த தென்பது ஆராய்ச்சிக்குரிய மற்றொரு அம்சம். இது விஷயத்தில் தப்ஸீர் களையும் - திருக்குர்ஆன் வியாக்கியானங்களையும் பிற நூல்களையும் வேறு வேறாக ஆராய்தல் அவசியம். ஏனென்றால், தப்ஸீர்கள் அறபு லிபியில்

தவிர பிற லிபியில் எழுதப்படலாகாதென்ற எதிர்ப்பு நெடுங்காலம் இருந்து வந்தது. எனது பாட்டனார் வைத்திருந்த தப்ஸீர் இச் சமயத்தில் நினைவுக்கு வருகிறது. தினமும் காலை வேளையில் அவர் கையில் அந்நூல் இருக்கும். ஹிஜ்ரி 1296இல் இந்த தப்ஸீர் வெளியாயிற்று. இதே தப்ஸீர் பிரதி கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் இன்றும் வைத்துப் பேணப்பட்டு வருகிறது. இதன் ஆசிரியர் ஹபீபு முஹம்மது ஆலிம், காயல்பட்டினம். இதன் பெயர் புதுஹாதுர் ரஹமானிய்யாஃ பீ தப்ஸீரி கலாமில் றப்பானிய்யா என்பது. இந்நூலில் திருக்குர்ஆன் வாசகங்கள் அறபு மொழியில் பெரிய எழுத்தில் அச்சிடப் பட்டிருக்கின்றன. ஒவ்வொருவரியின் அடியிலும் அந்தந்த வரியின் தர்ஜுமா - மொழிபெயர்ப்பு - அறபுத் தமிழில் காணப்படுகிறது. ஒவ்வொரு பக்கத்தின் விளிம்பிலும் விரிவான வியாக்கியானங்கள். பக்கத்தில் மூன்றிலொரு பகுதி இவ்வியாக்கியானங்களால் நிரம்பியிருக்கிறது.

1920 இலும் அடுத்து வந்த ஆண்டுகளிலுங் கூட இந்த தப்ஸீர்கள் தமிழ் லிபியில் எழுதப்படலாகாது என்று வாதாடி வந்தார்கள். அறபு மொழிக்கும் லிபிக்கும் அளிக்கப்பட்ட கௌரவத்துக்கு இதுவொன்றே தக்க சான்றாகும். திருக்குர்ஆன் பிரகடனஞ் செய்யப்பட்டது அறபு மொழியிலேயே என்பதால் குர்ஆன் வாசகம் அறபியிலேயே எழுதப்படல் வேண்டுமென்பது சரியே. இதிலிருந்து பெறப்படும் மற்றுமோர் உண்மை, நமது தந்தையர் சந்ததியிலும் பார்க்க பாட்டனார் சந்ததி ஒருவகையில் மேம்பட்டு விளங்கிற்று என்பதாகும். எவ்வாறெனில், நமது பாட்டனார் சந்ததியினர் திருக்குர்ஆனை தப்ஸீர்களின் உதவியால் அர்த்தம் அறிந்து ஓதினார்கள். ஆனால் அவர் களுக்குப் பின் வந்த சந்ததியினரோ இங்கிலிஷ் மோக வயப்பட்டு அறபுத் தமிழை மறந்தார்கள். இவர்கள் காலத்தில் இங்கிலிஷில் முஸ்லிம்கள் இயற்றிய தப்ஸீர்கள் இருக்கவில்லை. முஸ்லிம்களல்லாதோர் இயற்றிய தப்ஸீர்களே புழக்கத்திலிருந்தன. இவற்றை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் தப்ஸீர்களைப் படித்துப் பயன் பெறும் வாய்ப்பை இழந்தார்கள்.

அச்சுவாகனத்தின் அனுகூலங் கருதி அறபுத் தமிழ், தமிழ் லிபியில் எழுதப்பட வாரம்பித்ததும் தமிழில் இல்லாத அறபு ஒலிகள் தமிழில் காணப் படாது போயின. அறபுத் தமிழ் அறபியில் எழுதப்பட்டு வந்த காலத்தில் தமிழுக்குச் சிறப்பான ட, ண, ப, ழ போன்ற எழுத்துக்களின் ஒலியைக் குறிப்பதற்கு விஷேச அறபு எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன. அறபு என்னுஞ் சொல்லே அரபு எனத் திரிந்தமைக்கும் அறபுத் தமிழ் அதிலிருந்து தமிழ் லிபிக்கு மாறியமை ஒரு காரணமெனலாம். ரகர றகரத்துக்குள்ள ஒலிப் பேதத்தின் நுணுக்கத்தை அறியாமலிருந்ததும் காரணமாயிருக்கலாம். இந்

நாட்களிற் கூடச் சில சஞ்சிகைகளில் அக்கறை, அக்கரை என எழுதப்படுதலை ஒரு சான்றாகக்கொள்ளலாம்.

அறபில் உள்ள சிறப்பு ஒலிகளைக் காட்டும் விஷேச எழுத்துக்கள் தமிழில் உருவாக்கப்படல் அவசியமல்லவா? தமிழில் சிறப்பு எழுத்துக் களான ங, ஞ, ண, ட, ள, ற போன்றவற்றைக் கொண்ட சொற்களை ரோமன்-இங்கிலிஷ்-லிபியில் எழுதுவதற்கு ஒலிக் குறிப்புக்களுக்குப் பதில் விஷேச எழுத்துக்களை உருவாக்குதல் வேண்டுமென்னும் கருத்து அண்மையில் தெரிவிக்கப்பட்டது. அறபுத்தமிழ் விஷயத்திலும் இந்த யோசனையைப் பின்பற்றலாம். மணிப்பிரவாளம் தமிழுக்கு அளித்த ஷ, ஜ, ஸ போன்ற எழுத்துக்களும் இது விஷயத்தில் பயனளிக்கவல்லன.

அறபுத் தமிழ் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தை நாம் ஊகித்தறிந்து கொள்ளலாம். எனினும் அறிவியல் அடிப்படையில் எவரும் இதனை ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அச்சு வாகனத்தின் வருகை ஒரு காரணம். மேற்சொன்ன சிறப்பு எழுத்துக்கள் தமிழில் உருவாகாமை மற்றொரு காரணம். தப்ஸீர்களையும் மௌலூத்களையும் அறபு லிபியிலேயே எழுதுதல் வேண்டு மென்று வாதாடி வந்தமை இன்னுமொரு காரணம். அக்கால மக்கள் உலகியல் கல்விச் செல்வத்தில் காட்டி வந்த அசிரத்தை அறபுத் தமிழ் நூல்களை அச் சேற்றும் முயற்சி போதியளவு மேற்கொள்ளப்படாமை பிறிதொரு காரணம். இங்கிலிஷ் மொழியின் ஆதிக்கம் இன்னுமொரு காரணம். இன்று போதனா மொழி என்னும் அந்தஸ்தை இங்கிலிஷ் இழந்து வருகிறது. அறபுத் தமிழ் மீண்டும் தழைத்தோங்குவதற்கு இது நல்ல சமயம். ஆனால், நாம் இத் துறையில் ஸ்தாபனரீதியாக எதுவித முயற்சியும் எடுக்காதிருக்கிறோம். இந்த வகையில் அரசாங்க முஸ்லிம் கலாசாலைகளிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் பொறுப்பு பெரியது என்பது சொல்லாமலே பெறப்படும். அதுபோலவே முஸ்லிம் தமிழ் எழுத்தாளருக்கும் பெரும் பொறுப்பு உண்டு. ஏனென்றால், அறபுத் தமிழ் மரபைப் பேணாத முஸ்லிம் எழுத்தாளர்கள் தனித்தன்மை வாய்ந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்தல் சாத்தியம் என்று எனக்குத் தோன்றவில்லை.

எனது இக்கட்டுரையை முடிக்கு முன்னர் ‘இலங்கையில் இஸ்லாம்’ என்னும் நூலில் நான் கூறியுள்ள மூன்று யோசனைகளை இங்கு விரித்துக் கூற விழைகிறேன். இந்த யோசனைகள் முற்ற முடிந்த முடிபுகள் என்றோ, இங்கு தந்துள்ள ஒழுங்குப் பிரகாரமே பின்பற்றப்படல் வேண்டும் என்றோ கொள்ளலாகாது.

1. ஒலிக்குறிப்பு ஒருமைப்பாடு - இது விஷயத்தில் விசேஷ அடையாளங் களுக்குப் பதில் விசேஷ எழுத்துக்களை உருவாக்கலாம்.

2. அறபுத் தமிழ் அகராதி - இதற்கு அறபுத் தமிழ் நூல்களில் காணப்படும் அரும்பத உரைகளை ஆதாரமாகக் கொள்ளலாம்.

3. அறபுத் தமிழ் இலக்கியக் கோவை - புராணம், கலம்பகம், முனாஜாத்து, அந்தாதி, திருப்புகழ், ஞானப்பாட்டு ஆகியவற்றின் சிறந்த பகுதிகளை மட்டுமல்லாமல், நாடகம், சிந்து, தாலாட்டு, கும்மி, படைப்போர் ஆகியவற்றின் பகுதிகளுடன் புராண வசனம், மார்க்க ஒழுக்கம், கிஸ்ஸா முதலிய வசன நூல்களின் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இது அமைதல் வேண்டும்.

4. ஜீ.சீ.ஈ. வகுப்புகளுக்கு மட்டுமல்லாமல் கீழ் வகுப்புகளுக்கும் உகந்த வாசினைப் புத்தகங்கள் வெளியிடப்படல் வேண்டும். இவை முஸ்லிம் மாணவர்களை நல்வழிப்படுத்தக்கூடிய இஸ்லாமிய வரலாற்றுச் சம்ப வங்கள், கதைகள், இஸ்லாமிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் ஆகியனவற்றைச் சித்திரிப்பனவாக இருத்தல் வேண்டும்.

5. மொழிபெயர்ப்புக்கலை - அரசாங்க முஸ்லிம் ஆசிரியர் பாடசாலை களில் இதற்குச் சிறப்பிடம் அளிக்கப்படல் வேண்டும்.

6. அறபுத் தமிழில் சிறுவர் இலக்கிய நூல்கள்-வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்கக் கூடிய முதுசொம் எமது கலாசார பாரம்பரியமே. இதன் அருமை பெருமைகளை அவர்கள் அறிந்து கொள்வதற்குச் சிறுவயதி லிருந்தே பயிற்சியளித்தல் அவசியம். இதற்கேற்ற சிறுவர் இலக்கி யங்கள் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில், அறபுத் தமிழில் வெளி வருதல் அவசியம். இந் நூல்கள் இங்கிலிஷ் மொழியில் ஏற்பட்டுள்ள நூல் அமைப்பு, அச்செழுத்து வடிவம் முதலான முன்னேற்றங்களை அனுசரித்தனவாக உருவாக்கப்படல் இன்றியமையாததாகும்.

7. இலட்சியபூர்வமான திறனாய்வு-அறபுத் தமிழின் புனருத்தாரணத்துக்கு அத்தியாவசியமான அம்சங்கள் பற்றி மிகுந்த சிரத்தையுடன் ஆராய்தல் அவசியம். பழைய அறபுத் தமிழ் நூல்களின் பதவுரைகளிலும் பொழிப் புரைகளிலும் மட்டுமே காலத்தை விரயமாக்காது அந்நூல்களின் வரலாற்று ரீதியான அம்சங்கள், இலக்கியத் தராதரம், சாராம்சம், ஒப்பியல் ஆய்வு ஆகியவற்றிலும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

8. இவ்வேழு திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கென ஒரு சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டால் நன்றாயிருக்கும். தனி ஒருவராலோ, ஒரு சிலராலோ இவ்வளவையும் சாதித்துவிட முடியாது. கூட்டு முயற்சி

தேவை. திட்டவட்டமான அடிப்படையில் நிறைவேற்றப்படவேண்டிய இப் பிரச்சினைகள் தென் இந்திய முஸ்லிம்களுக்கும் பொதுவானவை என்பதால் அவர்களையும் நாம் கலந்தாலோசிக்கலாம். இவ்விதம் செய்வதனால் மொழி பெயர்ப்பு, மொழியுருவம் ஆகியவற்றில் ஒருமைப்பாடு காண்பதுடன் அறபுத் தமிழின் அந்தஸ்து உயர்வதற்கும் வழிபிறக்கும். சுதந்திரத்தைக் காப்பதற்கு, ஜனாநாயகத்தைப் பேணு வதற்கு இடையறாத கண்காணிப்பு அவசியமென்பார்கள். அது போலவே, கலாசார தனித்துவத்தைப் பேணிக் கட்டிக் காப்பதற்கும் அயராத திட்டவட்டமான பிரயாசைகள் இன்றியமையாதனவாகும். இப்பிரயாசைகளில் ஆர்வமுண்டாக்குவதற்கு இன்றைய விழா உதவி புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலாவிடம் இறைஞ்சுவேமாக. ஆமீன்.

- 1966ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2ஆம் திகதி மருதமுனையில்
நடைபெற்ற இஸ்லாமியத் தமிழிலக்கிய விழாவில்
சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை

- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் ப: 1 - 16

# 3

# அறபுத் தமிழ் ஆலிம் புலவர்

ஞாபகார்த்த விழா எடுக்க வேண்டிய சிறப்பினைப் பெற்ற ஒருவரது நினை வினை எத்தினத்தன்று நினைவு கூருவதென்பதுபற்றி மிகுந்த சுவாரசியமான ஒரு சர்ச்சை நடைபெறுவது வழக்கம். இறந்த தினத்தைக் கொண்டாட வேண்டுமென்போரும் பிறந்த தினத்தையே கொண்டாட வேண்டுமென் போரும் தத்தம் கொள்கைகளை வலியுறுத்தி நிற்பர்.

ஆனால் ராஜாஜி அவர்கள், ஓரிடத்தில் நினைவு தினங்களினை இறந்த தினத்தன்றே கொண்டாட வேண்டுமெனக் கூறியுள்ளார். நினைவு விழாக் கொண்டாடப் பெறும் தகுதியுடைய ஒருவர், பிறந்த தினத்தன்று மற்ற எந்த மனிதரையும் மிஞ்சும் எக்காரியத்தையும் செய்துவிடவில்லை என்றும், இறந்த தினத்தன்றே அவர் மற்ற மனிதர்களினின்றும் பிரிந்து நிற்கும் சிறப்புறு சாதனைகளையீட்டியவராக விளங்கியிருப்பாரென்றும் கூறிய ராஜாஜி, இறந்த தினத்தன்றே நினைவு விழாக்களினைக் கொண்டாட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

இக் கட்டுரை நாயகராகிய யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை செய்கு. சு. முஹம்மது அசனாலெப்பை ஆலிம் புலவர் அவர்களைப் பொறுத்த மட்டில், நாம் இறந்த தினத்தையே நினைவு தினமாக கொண்டாட வேண்டி யிருக்கின்றது. அவர் பிறந்த தினத்தையோ அல்லது பிறந்த வருடத்தையோ திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கின்றமையே காரணமாகும். ஆனால் அவர் இறந்த தினம் பற்றி எத்தகைய சந்தேகமும் கிடையாது. புலவர் அவர்களின் தம்பியாரும் எனது அருமைத் தந்தையாருமாகிய மர்ஹூம் ஜனாப் எஸ். எம். அபூபக்கர் அவர்கள் தமது குறிப்பேட்டில் அவர் மறைவு பற்றிக் குறித்துள்ளார். 1918 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமையன்று முஸ்லிம் நாட் கணக்குப்படி றபிய்யுல் அவ்வல் மாதம் பதின்மூன்றாவது பிறையன்று புலவர் அவர்கள் மௌத்தானார்கள்.

ஈழத்திலிருந்து அறபுத் தமிழ் இலக்கியம் வளர்த்த தலைசிறந்த தமிழ்ப் புலவர் அன்று மறைந்தார். யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர்களும் தென்னிந்திய முஸ்லிம் புலவர்களும் வாழ்த்திப் பரவிய வரகவியொருவர் அன்று கால மானார். அரசாங்கத்தினால் நடத்தப்படும் எழுதுவினைஞர் பரீட்சையில் தேறிய முதல் இலங்கை முஸ்லிம் எனக் கருதப்படத் தக்கவர் அன்று கால மானார். பலராலும் போற்றப்பட்ட, சறஹு நெறி தவறாத இஸ்லாமிய பக்தர் அன்று மறைந்தார்.

புலவர் அசனாலெப்பை அவர்களது வாழ்வு பலதுறை முக்கியத்துவம் கொண்ட ஒரு வாழ்வாகும். ஈழத்து முஸ்லிம்கள் வாழ்வில் இடம்பெற வேண்டிய பண்புகள் அத்தனையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது அவர் வாழ்வு.

இறக்கும்பொழுது அவர் யாழ்ப்பாண வடமாகாணப் பொறியியலாளர் அலுவலகத்தில் பிரதம கணக்கு இலிகிதராக இருந்தார். 1890ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அவர் எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியெய்தி இப் பதவியைப் பெற்றார். ஆனால் அதற்கு முன்னரும் அவர் யாழ்ப்பாணக் கச்சேரியில்தான் கடமையாற்றி வந்தார். அக்காலத்தில் வழக்கிலிருந்த கீழ்நிலை எழுதுவினைஞர் சேவையில் 1.7.1888 முதல் சேர்ந்த அவர், 1870ஆம் ஆண்டிற்கும் 1874ஆம் ஆண்டிற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும் ஆவரம்பட்டை, மான்கொம்பு முதலியவற்றை ஏற்றுமதி செய்யும் வணிகத்துறையில் ஈடு பட்டிருந்தவருமாகிய சுல்தான் முஹியத்தீன் என்பவரது மகனாகப் பிறந்தார் அசனாலெப்பை அவர்கள். அக்காலத்து முஸ்லிம்கள் இங்கிலிஷ் கல்வியை அது கிறிஸ்துவத்தோடு இரண்டறக் கலந்தது என நினைத்து, வெறுத்தொதுக் கினர். எனினும் அசனாலெப்பை இங்கிலிஷ் பாடசாலை ஒன்றிற்கே அனுப்பப் பட்டார். ஆறுமுக நாவலர் அவர்கள் கல்வி பயின்ற அதே மெதடிஸ்த கல்லூரியிலேயே இவரும் கல்வி பயின்றார். அக்கல்லூரியில் வருடா வருடம் அளிக்கப்படும் பைபிள் பரிசையும் பெற்ற அசனாலெப்பை இவ்வியத்தகு சாதனையால் அரசாங்க அதிபரது கவனத்தையும் ஈர்த்தாரென்று கூறுவர். அக்காலத்தில் வழங்கப்பெற்ற பாடசாலைப் பரிசில்கள் நிதிப் பரிசில்களாக இருந்தமையினால் பாடசாலைச் கட்டணம் அவற்றினின்று கழிக்கப்பெறுவது வழக்கம். பரிசிற் பணத்தைக் கொண்டே தனது மகன் படிப்பை முடித்தார் என அசனாலெப்பையின் தகப்பனார் அடிக்கடி கூறுவாராம். அசனாலெப்பை அவர்கள் தன் படிப்புத்திறத்தினால் ஒரு சிறிது காலத்திற்குள் தமையனாருடன் ஒரே வகுப்பில் கல்வி பயின்றார். மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தி

யெய்திய பின்னர் தம்பு நீதவானின் கீழ் பயிற்சி பெற்று வந்தார். இவரது ஆற்றல்களையறிந்த தம்பு நீதவான் இவரைப் புறெக்டராகப் படிக்குமாறு வேண்டினார். ஆனால் இவரோ அத்தொழிலில் தாம் எல்லாக் காலத்தும் உண்மையைக் கூற முடியாதெனவும் அதனால் அத்தொழிலைத் தாம் மேற் கொள்ள விரும்பவில்லை என்றும் கூறினார்.படிப்பு முடிந்த பின்னர் இவர் உத்தியோக வேலையாகக் கொழும்பு செல்லும்வரை (1890) தமிழ் படிப் பதிலேயே தனது பூரண கவனத்தையுஞ் செலுத்தினார். நன்னூல், தொல் காப்பியம் போன்ற இலக்கண நூல்களை ஐயந்திரிபறக் கற்ற காலம் அது. கஸ்தூரி வேலுப்பிள்ளை என்பவரிடம் நவரத்தினம் எனும் வைத்திய நூலிற்குப் பாடம் கேட்டார். ஆறுமுகநாவலர் செய்த தமிழ்க்கல்வி மறு மலர்ச்சியின் பயனை அனுபவித்தவர்களுள் அசனாலெப்பையும் ஒருவர். ஆறுமுகநாவலர் அவர்கள் சைவ நூல்களை வசன நடையில் ஆக்கியது போன்று இவர் இஸ்லாமிய நூல்களை வசன நடையில் எழுதாது விட்டமை எமது துர்ப்பாக்கியமென்றே கூறல் வேண்டும்.

கொழும்பில் உத்தியோகம் வகித்த காலத்திலும் அவர் தமிழ் இலக்கி யத்தில் ஈடுபட்டவராகவே காணப்பட்டார். கொழும்பில் வாழ்ந்து வந்து ஒரு பிரபல தரகர் இல்லத்தில் நடந்து வந்த கம்பராமாயண விளக்கத்திற்கு இவர் செல்வதுண்டென்றும், ஒரு நாள் பாடல்களுக்குப் பயன் சொல்லுமாறு சிலர் வேண்ட இவர், ‘‘எனக்குச் சரித்திரம் விளங்காது’’ என்று கூறினார் என்றும், அதற்கு அவர்கள் ‘‘சொல்லொரு பொருளாகவாவது சொல்லுங் கள்’’ என வேண்டினர் என்றும், பின்னர் இவர் பயன் சொன்ன முறையாவரை யும் ஆனந்தக் கடலில் ஆழ்த்தியதனால் அவரே அன்று முழு நாளும் பயன் சொல்ல வேண்டி இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பில் வாழ்ந்த காலத்தில் அவர் இத்தகைய இலக்கிய விஷயங்களிலும் ஈடுபட்டா ரெனினும், அவர் மனம் முழுவதும் ஆத்மார்த்த விடயங்களிலேயே ஈடுபடத் தொடங்கிற்று. அறபு மொழி வல்லுநரும் மதத்துறை அறிஞருமாகிய கொழும்பு அப்துர் ரஹ்மான் ஆலிம் சாகிபு அவர்களிடம் அறபு பயின்றார். நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை பற்றியும் இமாம் கஸ்ஸாலி அவர்களது ஆக்கங்களிலும் அவர் கவனம் செலுத்தினார். அறவு வான சாத்திரத்தை ஆர்வத்துடன் பயின்றார்.

கொழும்பில் சில வருட காலம் வேலை செய்து பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். அங்கு 1918 ஆம் ஆண்டுவரை மாவட்டப் பொறியியல் அலுவலகத்தில் கடமையாற்றினார்.

அசனாலெப்பை அவர்கள் காட்சிக்கு எளியராயும் மனிதாபிமானம் நிறைந்தவராகவும் இருந்தார். அக்காலத்து உத்தியோகத்தர்கள் ‘‘ரிக்ஷா’’

வண்டியிற் செல்வதே மரபாக இருந்ததெனினும் அவர் அதனை வெறுத் தொதுக்கித் ‘‘திருக்கல் வண்டி’’ எனச் சனரஞ்சகமாக அழைக்கப்படும் ஒற்றை மாட்டு வண்டியிலேயே சென்று வந்தார்.

பாரம்பரிய விஷயங்களிலும் ஆத்மார்த்தத் துறையிலுமே அவர் மனது எப்பொழுதும் லயித்திருந்தது.

அசனாலெப்பை அவர்களது ஆக்கங்கள் அவருக்குத் தமிழில் இருந்த பேரறிவினையும் இஸ்லாம் பற்றிய அவரது ஆழ்ந்த அறிவினையும் எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன.

தமிழ் மரபில் அதிகம் வழங்கப் பெறாதனவும், சாதாரண தமிழ் வாசகர் கட்கு நன்கு விளங்காதனவுமாகிய அறபுத் தொடர்புகளையும் இஸ்லாமியக் கோட்பாடுகளையும் அவர் தமது கவிதைகளில் கையாண்டுள்ள முறைமை மரபு தவறாது புதியன புகுத்துவதற்குத் தலைசிறந்த உதாரணமாகும். இத்துறையில் உழைத்த தென்னிந்திய முஸ்லிம் புலவர்களுடன் சரிநிகர் சமானமாக நிற்பவர் இவர். அவரது பாடல்கள் பல பக்திப் பாடல்களாகவே இருக்கின்றன. ‘‘புகழ்ப்பாவணி’’ எனும் தொகுப்பிலே வரும் பாடல்கள் தன்மை நிலையில் நின்று தமிழ் மரபு தவறாது பாடப்பட்ட பாக்களாகும். நவரத்தினத் திருப்புகள், முஹியத்தீன் ஆண்டகை அவர்கள் பேரில் ஆசிரிய விருத்தம், பதாயிகுப் பதிற்றுத் திருக்கந்தாதி, சாஹுல் ஹமீது ஆண்டகை யவர்கள் பேரில் முனாஜாத்து முதலியன அதில் இடம் பெறுகின்றன.

திருப்புகழ்ப் பா முறைக்கேயுரிய சந்தத் சிறப்பினை நாம் நவரத்தினத் திருப்புகழில் நன்கு காணலாம்.

முஹியத்தீன் ஆண்டகை அவர்கள் பேரில் பாடப்பெற்ற ஆசிரிய விருத்தத்திலும் முனாஜாத்திலும் தன்மை நிலைப் பக்தி வெளிப்பாடு சிறப்புற அமைவதைக் காணலாம்.

மறை பொருள் வைத்துப் பாடுவதும் சித்திரக்கவி பாடுவதும் அக்காலத்து இலக்கிய மரபுகளில் ஒன்று. பதாயிகுப்பதிற்றுத் திருக்கந்தாதியிலும் திருநாகை நிரோட்டயமக வந்தாதியிலும் இத்தகைய பாடல்களைக் காணலாம். இப் பாடல்களுக்குத் தாமே பதவுரை எழுதியிருப்பது கவனித்தற்குரியது.

அசனாலெப்பை அவர்களது இலக்கிய வாழ்வில் முக்கிய இடம்பெறுவது குலாம் காதிறு நாவலருடன் அவர் கொண்டிருந்த தொடர்புகளும் அசனா லெப்பைப் புலவர் அவர்களின் புகழிப்பாவணியைக் கண்ணுற்ற குலாம்காதிறு நாவலர் நூலின் சிறப்புக்களை வியந்து கூறி நமது புலவருக்கு ஒரு கடிதம் வரைந்தார். அன்று தொடங்கிய நட்பு இறுதிவரை நீடித்து அறபுத் தமிழ் இலக்கியத்திற்குப் பெரும் தொண்டாற்றிற்று. புலவர் அவர்கள் நாவலரின்

கடிதங்களைப் பெரிதும் பேணி வந்தார். அக்கடிதங்களில் குலாம் காதிறு நாவலர் அவர்கள் புலவரை ‘‘தம்பி அசனாலெப்பை’’ என்றே விளித்தல் வழக்கம்.

யாழ்ப்பாணத்திற்குத் தாம் வரவிருப்பதாகக் கூறிய குலாம்காதிறு நாவலருக்கு, ‘‘வருவதானால் புராணம் ஒன்றுடன் வருக’’ என அன்புப் பணியிட்டார் அசனாலெப்பை. நாவலரும் றிபாயியா புராணம் எனும் நூலுடன் வந்து சேர்ந்தார். இதுவே பின்னர் ஆரிபு நாயகம் என அழைக்கப் படலாயிற்று. (1896). குலாம்காதிறு நாவலர் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்தி லேயே புலவர் அவர்கள் திருநாகை நிரோட்டயமக வந்தாதியை எழுதிக் கொண்டிருந்தார்.

புலவரின் புகழ் திக்கெட்டும் பரவிற்று. அறபுத்தமிழ் இலக்கியம் படைத்தோர் யாவரும் அசனாலெப்பை அவர்களின் சாற்று கவியைத் தத்தம் நூலிற்கணியாகக் கொண்டனர். குலாம்காதிறு நாவலர் எழுதிய திருமக்காத்திரி பந்தாதி (1895) ஆரிபு நாயகம் (1896) நாகூர்ப் புராணம் (1895) முஹம்மது முஹியித்தீன் லெப்பைஹாஜிப் புலவர் எழுதிய சாதுலி நாயகம் (1914) காதிரு முஹியித்தீன் அண்ணாவியார் எழுதிய பிக்ஹுமாலை (1901) ஆகிய நூல்கள் அசனாலெப்பைப் புலவரின் சாற்று கவிகளுடன் வெளிவந்தன.

ஆனால் காலஞ் செல்லச் செல்ல அவர் இஸ்லாமியத் தத்துவத் துறையில் பெரிதும் ஈடுபட்டார். அறபுமொழியை நன்கு பயின்று சூபி முறைத் தத்துவங் களில் சிறப்பறிவு பெற்றார்.

செய்யிது முஹம்மது பளுள் பூக்கோயா தங்கள் அவர்கள், அசனா லெப்பை அவர்களது அறிவையும் பக்தியையும் அறிந்து அவருக்குக் கிலாபத்து எனும் பதவியினை வழங்கினார். காதிரிய்யாத் தரீக்கின் ஜதூரியாப் பிரிவின் தலைவராகக் கடமையாற்றுவதற்கான அதிகாரத்தை வழங்கும் இந் நியமனத்தை அசனாலெப்பையின் இளவயது காரணமாக பலர் எதிர்த்தன ரெனினும் பூக்கோயா தங்கள் அவர்கள் அசனாலெப்பையைப் போன்று தப்ஸீர் இலக்கியத்தில் சிறப்பறிவு பெற்றோரைத் தான் காணவில்லை எனக் கூறி அவர் கீர்த்தியை நிலைநாட்டினார்.

அறபு மொழியில் வல்லுநரான அசனாலெப்பையவர்கள் அறபியிலே பைத்துக்கள் இயற்றினார். நபிகள் நாயகம் பேரிலும் முஹியித்தீன் அப்துல் காதிறு ஆண்டகை அவர்கள் பேரிலும் தங்கள் ஐதுரூஸ் பேரிலும், காதிரிய்யாத் தரீக்கின் பேரிலும் பல பைத்துக்கள் இயற்றினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் தோன்றிய கலாசார மறுமலர்ச்சியின் இஸ்லாமியக் கொழுந்து அசனாலெப்பை அவர்கள்.

நாவலர் வளர்த்த தமிழ் மறுமலர்ச்சியை இஸ்லாமியத் துறையுட் பாய்ச்சி அறபும் தமிழும் வளர்த்து அதனால் தன் ஆத்ம ஞானத்தை ஓம்பியவர்; ஈழத் தமிழ் இலக்கியத்தின் மூல புருடர்களில் ஒருவர். ஈழம், தமிழிற் களித்துள்ள பெருமை மிகு தொண்டுகளில் ஒன்று நமது புலவர் அசனா லெப்பையவர்கள்.

அறபு, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லுநராக விளங்கிய இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

- தினகரன் 18. 12. 1963

- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் ப: 19 - 25

# 4

# இன்றைய தேவைகள்

இத்தொகுப்பினை ஆக்குங்கால் தோன்றிய சில முக்கிய பிரச்சினைகளை இங்கு குறிப்பிடல் அவசியம்.

இன்று நாம் அறபுச் சொற்களை உபயோகிக்கும் முறையிலும் அவற்றைத் தமிழில் எழுதும் முறையிலும் ஒருமைப்பாடில்லை. அறபுச் சொற்களை அவற்றின் ஒலிப்பொலிவு குறையாது எழுதுதல் அவசியம். ஆனால் இன்றோ, நிலைமை முற்றிலும் மாறிக் காணப்படுகின்றது. முஸ்லிம்கள் என்ற ஒரு சொல்லை முசுலீங்கள், முசுலிங்கள், முஸ்லீங்கள், முஸ்லீம்கள் எனப் பலவாறாக எழுதுவர். இவற்றுள் எது சரி என எவரும் சொல்லவில்லை. இத்தகைய சொற்களை எழுதுவதில் ஓர் ஒருமைப்பாட்டினை எழுத்தாளர் ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியம். எனவே அறபுச் சொற்களைத் தமிழில் எழுதும்பொழுது ஒலிக்குறிப்பு முறையில் ஒருமைப்பாட்டினை உண்டாக்குதல் முதற் கடனாகும். எமது முன்னோர் தமிழை அறபு லிபியில் எழுதும் பொழுது ங, ட, ச, ண போன்ற தமிழ் எழுத்துக்கட்கு எவ்வாறு அறபியில் ஒலிக் குறிகளை அமைத்துக் கொண்டனரோ அதேபோன்று தமிழ் லிபியில் அறபு எழுத்துக்களை எழுதும்பொழுதும், தமிழில் இல்லா ஒலிகளுக்கு ஏற்ற ஒலிக்குறிகளை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

பா. தாவூத்ஷா அவர்கள் 1932 ஆம் ஆண்டு வெளியிட்ட ''நபிகள் நாயக மான்மியம்'' எனும் நூலில் கையாண்டிருக்கும் முறையினை அடியொற்றிச் செல்வோமேயானால் ஓரளவு ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தலாம்.

அடுத்து, தமிழில் கையாளப்பெறும் அறபுச் சொற்களை எழுதும் முறையைக் காட்டுகின்றதும், அச்சொற்களின் கருத்துக்களைக் கூறுகின்றதுமான ஓர் அகராதி தேவை. தற்கால அகராதி முறைப்படி தயாரிக்கப்படும் அத்தொகுப்பில் சொல்லின் பொருள் மாத்திரமல்லாது, நிகண்டு போன்று ஒரு பொருட் கிளவிகள் யாவும் குறிப்பிடப்படல் வேண்டும். தமிழில்

அறபுக்கான ஒலிக் குறிப்புக்களுடன் குறித்த சொல்லை எழுதி, அடுத்து அறபியில் அதனை எழுதிப் பின்னர் அதன் கருத்தையும் ஒத்த பொருளுடைய பிற சொற்களையும் குறித்தல் வேண்டும். இவ்வாறான முறையில் ஓர் அறபுத் தமிழ் சொற்கோவை தக்கவாறு தயாரிக்கப்படுமேல் அது இஸ்லாமிய வரலாறு, கலாசாரம் ஆகியவற்றைக் காட்டும் கண்ணாடியாக விளங்குமென்பது திண்ணம். தமிழ் மூலம் இஸ்லாம் பரப்பும் அறிஞர்கள் இத்துறையில் பணியாற்ற வேண்டுமென்பது என் அவா.

இன்று நாம் அறபுச் சொற்களையும், அறபுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பிற மொழிச் சொற்களையும் கையாளுகின்றோம். இதனால் அவற்றை எழுதுவதில் பெரு மயக்கம் ஏற்படுகின்றது. உதாரணமாக, அறபியில் 'றமழான்' என வருவது உருதுவில் 'றம்சான்' என்றே நிற்கும். இவ்வாறான உச்சரிப்பு வேறுபாடுகள் வரும்பொழுது நாம் அறபு உச்சரிப்பையே எடுத்துக் கொள்ளல் வேண்டும். அறபு நாட்டிற்கும் எமக்குமுள்ள பூர்வீக உறவு தரும் உரிமை அது.

இஸ்லாமியப் பண்பினை நன்கு விளக்குவதற்குச் சில அறபுச் சொற்களைக் கையாளுதல் எத்துணை அவசியமோ அத்துணை முக்கியமானது சில தமிழ்ச் சொற்களைக் கையாளாமல் தவிர்த்தலுமாகும். சொற்பொருள் வழி வரலாற்றில் இந்து சமயக் கோட்பாடுகளுக்கியையத் தோன்றிய சொற்களையும் அவற்றை விளக்கத் தோன்றிய சொற்களையும் பிரயோகிப்பின் அவை இஸ்லாமியக் கோட்பாடுகட்கு ஒவ்வாது நிற்கும். அல்லாஹ்வைப் பற்றிப் பேசும்பொழுது 'அவதரித்தல்' 'காட்சியளித்தல்' 'இரண்டறக் கலத்தல்' போன்ற பதங்கள் கையாளப்படுமேல் அது இஸ்லாத்தின் ஏகதெய்வக் கோட்பாட்டிற்குத் திரையிட்டுவிடும்.

இவ்வாறு அறபுச் சொற்களை அதிகம் கையாளவேண்டுமென்று சொல்லும் பொழுது எமது இலக்கிய ஆக்கங்கள் யாவும் எம்மிடையே மாத்திரம் இருப்பனவாகவும், பிற தமிழ் பேசும் மக்களால் பயிலப்பட முடியாதனவாகவும் போய் விடக்கூடும். அந்நிலைமை ஏற்படுவதை நாம் அவசியம் தடுத்தல் வேண்டும். அறபுத் தமிழ் நூல்கள் சிலவற்றைப் பார்த்தால் முன்னர் குறிப்பிட்டுள்ள முறையில் வேண்டாத அறபுச் சொற்கள் பல அங்கு மலிந்து கிடப்பதைக் காணலாம். கஸஸுல் அன்பியா எனும் நூலில் முதலிரண்டு அதிகாரங்களிலும் தமிழல்லாத சொற்கள் நூறு வரையில் உள. என் கருத்துப்படி இவற்றுள் நாற்பது சொற்கள் வரையில் கட்டாயம் இடம் பெறவேண்டியன. முப்பது சொற்கள் இடம் பெற்றிருக்கவே கூடாது. மேலே கூறிய நியதிகளை உரைகல்லாகக் கொள்ளின், இம் முடிவுக்கே வரல் வேண்டும்.

இந் நிலைமை நீங்கி எமது இலக்கியங்கள் பற்றிப் பிறரும் அறிவதற்கு, அறபுத் தமிழ் இலக்கியக் கோவை ஒன்றினைத் திரட்டல் அவசியம். அறபுத் தமிழ் இலக்கியங்கள் என்று கூறும்பொழுது உயர் தமிழ் இலக்கியங்கட்கு ஈடாக நிற்கும் சீறாப்புராணம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காது, முஸ்லிம் மக்களின் அன்றாட வாழ்வில் முன்னெல்லாம் இடம்பெற்ற முனாஜாத்துக்கள், சிந்துகள், காரணச் சரித்திரங்கள், கிஸ்ஸாக்கள் போன்ற மக்கள் இலக்கியங்கட்கே முக்கியத்துவம் கொடுத்துத் திரட்டல் வேண்டும். எனினும் ஒலிக் குறிப்புக்களைப் பார்க்கிலும் விசேஷ எழுத்துக்களைப் பாவித்தல் சிறப்புடையதாகும்.

அறபுத் தமிழ் இலக்கியத்தில் இஸ்லாத்தின் தனித்துவம் குன்றாமலும் தமிழ்ப் பண்பு மறையாமலும் இருப்பதற்கு (1) ஒலிக்குறி ஒருமைப்பாடு (2) அறபுத் தமிழ் அகராதி (3) அறபுத் தமிழ் இலக்கியக் கோவை என்பன பற்றி உடன் ஆவன செய்தல் வேண்டும்.

- 1963 ஜுன் மாதம் வெளியிடப்பட்ட ‘இலங்கையில் இஸ்லாம்’<br>எதும் நூலின் நூன்முகத்தின் ஒரு பகுதி . ப: vii- x

- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் ப: 26 - 29

# 5

# மொழிபெயர்ப்புக் கலை

''கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிதல் மாத்திரமல்ல. மன விரிவுக்கும் தெளிவுக்கும் பலவித அறிவு நூல்களையும் நன்றாயறிவதாம். ஆனால் மேற்சொல்லிய பிரயோசனமுள்ள நூல்கள் தமிழ் பாஷையிலே மிகவும் சுருக்கமானபடியினாலேயே தமிழ்ப் பாஷையை மாத்திரம் தெரிந்தவர்கள் அவைகளையறிந்து கொள்வதற்கு வழியில்லாது இருக்கின்றது. ஆகையால் அறபு கிதாபுகளிலிருந்து அறிய வேண்டிய அறிவுகளையும் ''இங்கிலிஷ்'' முதலிய பாஷைகளிலுள்ள கல்விகளையும் விஷேசமான புதினங்களையும் படித்தவர்களும் படியாதவர்களும், முதியவர்களும் இளையவர்களும் மற்றையவர்களும் தங்கள் தங்கள் வேலை முயற்சிகளோடு வாசித்தறிந்து கொள்ளும்படி உலமாக்கள், கல்விமான்கள் ஆகியவர்களுடைய உதவியைக் கொண்டு ஒரு பத்திரிகையைக் கிழமைதோறும் பிரசுரஞ் செய்ய விரும்பி இப்பத்திரிகைக்கு 'முஸ்லிம் நேசன் என்ற பெயரிட்டோம்.''

1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாள் வெளியான அறபுத் தமிழ் வார இதழாகிய முஸ்லிம் நேசனின்' முதலாந் தலையங்கத்தில் எம்.சி. சித்திலெவ்வை அவர்களால் எழுதப்பட்ட கூற்றின் ஒரு பகுதியே மேற்போந்த வசனங்களாகும். சித்திலெவ்வை அவர்களே முஸ்லிம் நேசனின் சொந்தக் காரர்; பிரசுரகர்த்தர்; ஆசிரியர். ஒருவரே மூவராய் நின்று கடமையாற்றினார். இவருடைய காலத்து இலங்கையின் வரலாற்றைத் துருவி ஆராய, நேரமும் ஆர்வமும் புத்திசாதுரியமுள்ள வித்தகரெவெரேனும் முன் வருவாராயின் எம்.சி. சித்திலெவ்வை அவர்கள் முஸ்லிம் கல்வியின் மறுமலர்ச்சித் தந்தை எனப் போற்றுதற்கான போதிய அத்தாட்சியைக் காண்டல் கூடுமென்று நம்பிக்கையுடன் நான் கூறத் துணிவேன். சித்திலெவ்வை அவர்கள் இலங்கை முஸ்லிம் மக்களின் மத்தியிலே புத்தி விவேகத்தின் எழுச்சிக்காகப் பல தடவைகளில் சொன்னவை, எழுதியவை எல்லாம் பொருள் நிறைந்தவை; உற்சாகமூட்டுபவை; விலைமதிப்பற்றவை. இவை எல்லாவற்றையும் விட

இன்று எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவைகளாக அவர் அன்று கூறிய அறிவுரைகள் காட்டிய வழிவகைகள் அமைந்து கிடக்கின்றன என்று நாம் பிரமிப்படைய வேண்டியவர்களாகின்றோம். இவற்றில் ஒன்றே மேலே காட்டிய மேற்கோள்.

அறபு மொழியின் துணையின்றி அல்லாஹ்வின் பிரகடனமாக அருளப் பெற்ற இறை மறையாம் திருக்குர்ஆனை எங்கள் சமூகம் அணுக முடியாது; அம்மொழியில் ஆக்கப்பட்ட தப்ஸீர்களையோ, பிக்ஹு நூல்களையோ, மார்க்கக் கிரந்தங்களையோ நாம் அறிய முடியாது. கஸ்ஸாலி இமாம், ஷா வலியுல்லாஹ், முஹம்மது அப்துஹ் ஆகிய பெரியார்கள் விட்டுச் சென்ற அரும்பெரும் நூல்களைப் பயன்படுத்த முடியாது.

அறபு மொழி மூலம் பெறக்கூடிய அறிவினை எங்கள் சமூகத்தில் நிறையப் பரப்பினாலன்றிக் கலாசார விருத்தி முயற்சிகளை அனுகூலமாகக் கையாள முடியாது. இவ்வுண்மையை நன்குணர்ந்தே பல பேதங்களுக்கு எதிராக, தொல்லைகளைப் பொருட்படுத்தாது, சித்திலெவ்வை தமது பத்திரிகையை அவர் சார்ந்த சமூகமாகிய எங்கள் சமூகம் எந்த வகையிலும் எந்த வேளையிலும், அத்தியாவசியமான அறிவினது குறைவினால் வாடாமல், மலர்ச்சிகொள்ள வேண்டுமென்ற விடாப்பிடி நோக்கத்தோடு தொடக்கி வைத்தார்.

கல்வியின் ஊடகத்திலும் தொடர்பிலும் அதன் வெளியீட்டு பிரசார முறைகளிலும் காலம் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. வாராந்த சஞ்சிகையன்றித் தினசரிகளுந் தோன்றலாயின. அன்று புராணங் கேட்ட மக்கள் இன்று வானொலி மூலம் தோத்திரப் பாடல்களைக் கேட்டும் இரசிக்கக் கூடியவர்களாயிருக்கின்றார்கள். வாசிப்பு, எழுத்து, கணிதம் என்ற மூன்று பாடங்களுமே உரித்தாயிருந்த பாடசாலைகள் இன்று வாழ்க்கைக்கு ஆயத்தப் படுத்தும் மத்தியதானமாக மாற்றப்படலாயின. சமூகமும் பாடசாலையும் மிகவும் நெருங்கிப் பின்னிப் பிணைந்து நிற்கின்றன. எவ்வாறெனின் பாட சாலையின் சுற்றாடலிலுள்ள ஒவ்வொவரும் பழைய, புதிய, அல்லது வருங்கால மாணாக்கராகத் தொடர்பு கொள்ளப்படுகின்றார். இது தவிர்க்க முடியாதது. இப்பொழுது அறிவென்பது தொடர்ச்சியாக எண்ணமோ, கவலையோ இல்லாத முயற்சிகளின் மூலம் அதாவது நாங்கள் பிராண வாயுவை மூச்சுப் பேச்சின்றிப் பிரித்தெடுத்துக்கொண்டு சுவாசிப்பது போன்று பெறப்பட்டு வருகின்றது. கன்னங்கரா காலத்திலே தாபிக்கப்பட்ட அரசாங்க முஸ்லிம் பாடசாலைகள் அதன்பின் வருடாவருடம் விருத்தியாக்கப்பட்டு வளர்ந்துள்ளன. பொதுவாக நோக்குமிடத்து, இப்பாடசாலைகளிற் கல்வி பயிற்றும் ஆசிரியர் குழாம் எங்கள் கலாசாரப் பாதுகாவலர்களாகத் திகழ்

கின்றார்கள் என்பதில் ஐயமில்லை. இப்படியான ஒரு தலைமையும் தானமும் வருதல் கூடுமென்று அரசினர் முஸ்லிம் பாடசாலைகள் தாபனமாவதற்கு முன்னிருந்த சித்திலெவ்வை அவர்கள் காலத்தில் எதிர்பார்த்திருக்க முடியாது.

இவற்றின் பெறுபேறாக அரசாங்க முஸ்லிம் பாடசாலைகளிற் கற்பிக்கும் ஆசிரியர்கள் எங்கள் சமூக கலாசாரத்தின் பாதுகாவலர்களாகத் திகழ, அவர் களை ஆசிரியர்களாகப் பயிற்றும் பயிற்சிக் கல்லூரிகள் எங்கள் கலாசாரத்தின் அரண்களாக அமைகின்றன. மேற்படி கல்லூரிகளிற் பயிற்சி பெற்ற ஆசிரி யர்கள் தங்கள் பொறுப்பில் விடப்படும் மாணாக்கரைப் பயிற்றுவதன்றியும் பூரணமான நல்வாழ்க்கையை நடாத்த வழிகாட்டிகளாக எங்கள் சமூகத்தின் வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் பொறுப்புமுடையவராவார்கள்.

எங்கள் கலாசாரத்தை வளர்க்கத் தேவைப்படும் மொழிபெயர்ப்பாளர் குழாமொன்றினை அரசாங்க முஸ்லிம் ஆசிரியர்களிலிருந்து உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. அறபுமொழி மூலம் பெறக்கூடிய அறிவை ஆசிரியர் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அறபு மொழி தெரியாத பொதுமக்களுக்கும் இடையிற் பரவச் செய்வர். இவ்வகை மொழிபெயர்ப் பாளர் குழாத்தினர் இந்த நோக்கத்தைத் தனிப்பட்டவர்களாக பிரித்து வைக்கப் பட்ட அங்கங்களாகப் பொதுவான நோக்கம் எதுவுமின்றி பொது நிருவாக மின்றி, பொது அமைப்பின்றிச் செவ்வையாகவும் திருப்திகரமாகவும் நிறை வேற்ற முடியாது. மொழிபெயர்ப்புத் துறையின் செயல் முறையில் அனு சரிக்கக் கூடிய விதிகள் மற்றும் விருத்தியடைந்த கலைகள் சாத்திரங் களுக்கு இருப்பதுபோல், இருந்தாற்றான் சமூகத்திற்கு வேண்டிய நன்மை பயக்கும். இவ்வகையான நெறிமுறை எங்கள் சமூகத்தில் உதிக்க வேண்டுமாயின் அதைப் பயிற்சிக் கல்லூரிகள் போன்ற தாபனங்களாற்றான் தோற்று விக்க முடியும். மொழி பெயர்ப்புக் கலை மிகவும் முக்கியமானது. எனவே அதனை முறைப்படி தேடிக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். இதனை ஏற்பாடு செய்வதற்கு வாய்ப்பான தகுந்த முறை இந்த அற்புதக் கலையாகிய மொழிபெயர்ப்புக் கலைக்குத் தீர்க்கமான-சிறப்பான இடம் பாட விதானத் தில் கட்டாய பாடமாகவோ விருப்பப் பாடமாகவோ அதற்குரிய மேன்மை யோடு அளிக்கப்பட வேண்டும். நேரசூசி போடும் நுணுக்கம், பரீட்சைக் கேள்விப் பத்திரங்கள் பற்றிய விசாரணை இக்கட்டுரைக்கு அப்பாற் பட்டவை களாகும்.

தமிழ் மொழியைப் பேசும் இலங்கை முஸ்லிம்களுக்கு இந்த மொழி பெயர்ப்புத் துறையிலே தென்னிந்தியாவிலுஞ் சரி, இலங்கையிலுஞ் சரி அறபுத்தமிழ் எழுத்தாளர்களால் பெருவைப்பென விட்டுச் சென்ற ஒரு தனி மரபு எங்கள் மூதாதையருக்கும் ஏற்புடைத்தாய் தலைமுறை தலைமுறையாய்

ஆரம்ப காலந்தொட்டே யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாய் இருந்தது எனலாம். ஏனெனில் அப்போதிருந்த குர்ஆன் பள்ளிக்கூட முறை வீட்டிலும் பொது இடங்களிலும் மௌலூத், புராணம் ஆகியவற்றை ஓதும் முறை; பள்ளிவாசல்களில் ஒழுங்காகச் சொல்லப்படும் ஹதீது முறை முதலியவை பொதியப் பெற்றுள்ள கேட்டல், பார்த்தல் என்ற பயிற்றல் முறைகளோடு பொருந்திய ஓதலும் ஒப்புவித்தலும் என்ற தன்மைகள் காரணமாக அந்தக் காலத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவாக இருந்தும் அறபுத் தமிழ் இலக்கியம் மிகவும் பரவியிருந்தது. இன்று அந்நிலை குன்றி வருவதை நாம் உற்று நோக்கி ஆவன செய்ய முன்வர வேண்டும். சகல துறைகளிலும் அரசியல், கலாசாரம் ஆகியவற்றிலும் இவற்றை உணர்ச்சியுடனும் தன்மானத் துடனும் மேலும் வளர்க்க ஒருப்படாமையாலும் வளர்ந்து வந்த மரபு வாடி வதங்கத் தொடங்குகின்றது.

இந்த மரபைப் புதுப்பிக்குமிடத்து சென்ற பல ஆண்டுகளிற் பெற்ற அனுபங்களினால் நாங்கள் நன்மை அடையலாம்; கட்டாயம் அடையலாம். அன்றியும் இக்காலத் தேவைக்கியைய இந்த மரபை ஒரு சில மாற்றங்களுடன் புதுப்பிக்க உத்திகளைக் கையாளுவோமாக!

இந்த மரபின் தோற்றமும் வளர்ச்சியும் முஸ்லிம் மக்களின் விஷேட பான்மையாகிய அறபு மொழிப் பாசத்தோடு தொடர்புடையதெனலாம். எங்கள் மூதாதையருக்கும் எங்களுக்கும் அறபு மொழி ஓர் உலக மொழி என்பதற்காகவோ, கிரேக்க இந்திய இலக்கியங்களின் மொழி பெயர்ப்புக் களையுடைய வளம்பெற்ற மொழி என்பதற்காகவோ பழைய நூற்றாண்டு களின் சக்கராதிபத்திய மொழி என்பதற்காகவோ அல்ல, அஃது எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. பரிசுத்த குர்ஆன் மொழியாகையால் அஃது எங்களுக்கு அதி முக்கியம் ஆகின்றது. ஏனெனில் மனிதனால் உருவாக்கப் படாத அல்லாஹ்வின் வார்த்தைகள் அம்மொழியிற்றான் இறக்கப்பட்டன. ஆகவேதான் திருக்குர்ஆனுக்கே உரித்தான அதிலுள்ள விஷேடமான கருத்துப் படிவங்களுக்கும் சொற்களுக்கும் பொருத்தமான சம சொற்கள் வேற்று மொழியிற் காண்பதரிது. மற்றைய மொழிகளில் முற்றாக-முழுமையாக உணர்ச்சியோடு இதனை எடுத்துரைக்க முடியாத கஷ்டம் ஒரு புறமிருக்க திருக்குர்ஆனின் ஞான அருட்சி, தூது, சந்தம், மொழிநடை இவை காரணமாக இவ்விறை மறையை மற்றைய மொழிகளிற் பூரணமாக மொழி பெயர்க்க முடியாதென அழுத்தம் திருத்தமாக முடிவு செய்யப்படலாயிற்று. பிக்தோல் அவர்களின் கூற்றுப்படி திருக்குர் ஆன் மொழிபெயர்ப்பில் கண்ணீர் சிந்தவும் பரவசமடையவுஞ் செய்யும் அதி உசிதமான இன்னிசையைக் கை நெகிழ விட்டுத் தகுதியான வார்த்தைகளோடு பெரும்பாலாக எழுத்துப் பெயர்ச்சியே

செயற்பாலதாகின்றது. சரி சம சொற்களையும் சில சமயத்திற் காண முடியாது. அத்தன்மையுள்ள சொற்களையும் கருத்துப்படிவங்களையும் உதாரணங் களாகக் கொள்ளுவோம். அல்லாஹ், றசூல், உம்மத், தௌஹீத், சகறாத், மையித், ஜனாஸா, வலீமா போன்ற சொற்களுக்கு ஓரளவு சம பதங்கள் தமிழிலிருந்தும் அவற்றை உபயோகிக்க முஸ்லிம் மக்கள் ஏன் மறுக்கிறார்கள் என்பது இப்போது தெளிவாகின்றது.

- இளம்பிறை சஞ்சிகை கல்வி மலர் -1965

- பின்னர் **'மொழிபெயர்ப்புக்கலை'** எனும் சிறு நூலாகவும்
1965 செப்டம்பர் 30ஆம் திகதி வெளிவந்தது.

- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் ப: 30 - 35

# 6

# ஸ்வாஹிலி மொழியும் அறபுத் தமிழும்

ஸ்வாஹிலி மொழியுடன் எனக்கு முதன் முதலில் பரிச்சயம் ஏற்பட்டது, எதிர்பாராத சூழ்நிலையிலாகும். 1935 ஜனவரி 29 ஆந் திகதி இந்த அனுபவம் உண்டாயிற்று. லண்டனிலிருந்து இலங்கை திரும்புவதற்கு எப்பொழுது கப்பல் கிடைக்குமோ வென்று காத்துக் கொண்டிருந்த நான் செய்வதற்கு விசேஷமாக எதுவுமில்லாத நிலையில், பெயர் பெற்ற ஃபொய்ல்ஸ் - Foyles - புத்தகசாலைக்குச் சென்று புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு நின்றேன். அதன் பின்னர் அங்கிருந்து வெளியேறி, அக்கம்பக்கங்களிலிருந்த கடைகளைப் பார்த்தபடி நடந்தேன். ஒரு முடுக்கில் நாலைந்து சிறிய புத்தகக் கடைகள் இருக்கக் கண்டேன். இந்தக் கடைகள் வழக்கமான புத்தகக் கடைகளைப் போலல்லாமல், மீதிப் புத்தகங்கள் - Remainder Books - விற்கும் கடைகளாக விளங்கின.

புத்தகங்கள் வெளியிடும் பெரிய ஸ்தாபனங்கள் விற்று எஞ்சும் புத்தகங்களை மிகக்குறைந்த விலைக்குத் தள்ளிக் கழிப்பது வழக்கம். இப்படி விற்கப்படும் புத்தகங்களே மீதிப் புத்தகங்கள். இத்தகைய கடையொன்றிலே அறபு எழுத்துக்கள் துலாம்பரமாகப் பொறிக்கப் பெற்ற நூலொன்றைக் கண் டேன். அதை எடுத்துப் புரட்டிப் பார்த்தபோது,அது ஸ்வாஹிலி மொழி நூலென்பதும் தெரியவந்தது. அதன் ஸ்வாஹிலி பெயர் ‘‘உத்தென்டி வாம்வானா குபோனா’’ - குடும்பப் பெண்ணுக்கு வாம்வானா குபோனாவின் புத்திமதி - என்பதாகும். அறபு மொழித் தலையங்கத்தில் எனக்கிருந்த அன்புத் தளையின் காரணமாக அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டேன்.

அறபு எழுத்துக்களால் அமைந்திருந்த தலைப்பைக் கூர்ந்து கவனித்த போது, அது அறபேயல்ல என்பது புலனாயிற்று. பள்ளி நாட்களில் அறபுத் தமிழ் கற்றிருந்தமையால், அறபு லிபியில் எழுதப்படுவனவெல்லாம் அறபல்ல என்பது எனக்குத் தெரியும். உன்னிப்பாகக் கவனித்ததில் தென்னிந்திய, இலங்கை முஸ்லிம்களிடையே ஒரு காலத்தில் வழக்கிலிருந்த அறபுத் தமிழ்

எழுத்து முறைக்கும் நூலின் தலைப்பிற் காணப்பட்ட எழுத்து முறைக்கும் நெருங்கிய ஒற்றுமையிருந்தமையைக் கண்டேன். ஆயினும் அது விஷயத்தை அப்பொழுது நான் மேற்கொண்டு ஆராயவில்லை.

ஆனால், பின்னர் இலங்கைச் சோனகரின் தாய்மொழி பற்றிய பிரச்சினை களும் அவற்றையொட்டிய சர்ச்சைகளும் எழுந்த சமயத்திலும், அண்மையில் அறபுத் தமிழின் வளர்ச்சி, தளர்ச்சி முதலியன பற்றி மேலும் அறிந்துகொள்ள முற்பட்ட போதும் மிகுந்த அக்கறையுடன் இவ்விஷயத்தை ஆராய்ந்தேன். இதன் பயனாக இந்த நூலுக்கும் கடந்த தலைமுறைகளில் இலங்கையில் முஸ்லிம் பெண்கள் மத்தியில் மிகுந்த மதிப்பைப் பெற்றிருந்த ''பெண்புத்தி மாலை'' என்ற நூலுக்கும் கருத்தளவில் நெருக்கமான ஒற்றுமைகள் இருப் பதை உணர்ந்தேன். உதாரணமாக, ஸ்வாஹிலி நூலின் 5ஆம் செய்யுளில் வரும்-

''ஆண்டவனை ஏற்று, அவன் றஃமத்தை - கருணையை - இரந்து; அவன் ஆணைப்படி, அவனைப் பணிந்து வணங்குவோமாக.''
என்னும் பொருள்படும்-

"When you have thus acknowledged
The name of God the Mighty
Then let us pray for his bounty,
As he the Lord shall deem fit."

செய்யுளின் கருத்து, ''பெண்புத்தி மாலை''யிலும் பின்வருமாறு சொல்லப் பட்டிருக்கிறது:

*''அல்லாஹ் ஒருவனை அஞ்சி வணங்கிக்கோ மயிலே*
*எல்லாமவன் என்றிருதயத் தெண்ணிக்கோ குயிலே''*

''பட்டுப் புனைந்து, பரிமளம் பூசி, கை கால்களுக்குக் காப்பணிந்து'' என்றும், ''புதுமணப் பெண்போலப் புருஷனை மகிழ்விப்பாயாக,'' என்னும் பொருள் தரும்.

"Do you adorn yours – If with finery
That you remain like a bride,
Put anklets upon your ankles
And bracelets upon you arm."

வரிகளில் கருத்து, ''பெண்புத்தி மாலை''யில்

*''பட்டையுடுத்துப் பரிமளம் பூசிக்கோ மயிலே,*
*கட்டிய கொங்கைக்குக் கச்சு மிறுக்கிக்கோ குயிலே,*
*வார்ந்து முடித்து மணங்கள் பூசிக்கோ மயிலே,*
*சேர்ந்து புருஷனைச் சிந்தை மகிழ்ந்துக்கோ குயிலே.''*

என்னும் பாடலிற் காணப்படுகிறது. இப்படி மேலும் பல ஒற்றுமைகள் இவ்விரண்டு நூல்களுக்குமுண்டு.

ஆழ்ந்து சிந்தித்தோமானால் இந்த ஒற்றுமையையிட்டு வியப்படையத் தேவையில்லை. ஏனென்றால் இந்த ஸ்வாஹிலி மக்களினதும் சோனகர் களினதும் கலாசாரம் இஸ்லாமிய கலாசாரமேயாகும். மேலும் ஸ்வாஹிலி மொழிக்கும் அறபுத் தமிழக்கும்கூட பல ஒற்றுமைகளை நாம் காணலாம். அறபுத்தமிழில் அறபுச் சொற்கள் விரவிக் கிடந்தாலும் வசனங்கள் தமிழ் இலக்கணப்படியே அமையும். இவ்வாறே மொழியிலும் பல அறபுச் சொற்கள் இடம் பெற்றாலும் வசன ஆக்கம் கிழக்காபிரிக்கக் கரையோரங்களில் வழக்கிலிருந்த பாந்து - Bantu - மொழி மரபை யொட்டியே அமையும். அறபு அட்சரங்களால் குறிப்பிட முடியாத தமிழ் ஒலிகளைக் குறிப்பதற்கு நொக்கத்துகளை - நுகத் - குற்றுகளை - உபயோகிக்கும் வழக்கம் ஸ்வாஹிலி, அறபுத்தமிழ் இரண்டிற்கும் பொதுவாகும். அறபு லிபியில் எழுதப் பெற்றுவந்த அறபுத்தமிழ், தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அச்சு இயந்திரம் வந்து சேர்ந்ததுடன் தமிழ் லிபியில் அச்சாகியது. அது போலவே ஸ்வாஹிலியும் பிரிட்டிஷாருடைய செல்வாக்கின் காரணமாக ரோமன் லிபியில் எழுதப்படலாயிற்று. முஸ்லிம் சாம்ராஜ்யம் கீர்த்தியின் சிகரத்தை அடைந்திருந்த காலத்தில் பல மொழிகள், அரபு லிபியிலேயே எழுதப்பெற்றன. இவற்றுள் மலாய், துருக்கி, உஸ்பெக் முதலிய மொழிகள் சிலவாகும். இன்று மலாயும் துருக்கியும் ரோமன் லிபியில் எழுதப்படுகின்றன. ஆட்சிக்கும் மொழிக்குமுண்டாகும் பிணைப்பினை இந்தச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இன்று ஸ்வாஹிலி கிழக்காபிரிக்காவின் பிரதான மொழியாகவும் தன்ஸானியாவின் உத்தியோக மொழியாகவும் கீன்யாவின் பிரதான அரச கருமமொழியாகவும் விளங்குகிறது. கிழக்காபிரிக்காவில் ஸ்வாஹிலி பெற்றிருக்கும் இந்த அந்தஸ்து தொடர்ந்து நிலைநிற்குமா என்பது கேள் விக்குரியது, எனினும் உலகின் அதிமுக்கியமான பன்னிரண்டு மொழிகளில் ஸ்வாஹிலியும் ஒன்று என்பதாக நான் எங்கோ படித்த ஞாபகமிருக்கிறது.

மொம்பாஸாவுக்கு அருகில் ஹெதாவு என்னுமிடத்தில் குடியேறிய முதலாவது அறபுக் கோஷ்டிபற்றி இங்கு குறிப்பிடல் பொருத்தமாகும். ஐந்தாவது உமைய்யா ஹலீபா அப்துல் மாலிக் இபனு மர்வான் (கி. பி. 685 - 705) ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகத் தப்பியோடிய (அறபு) அகதிகள் ஹெதாவிற் குடியேறினார்கள். இலங்கையில் பல்வேறு இடங்களிலும் (ஏழெட்டு இடங்களில்)வந்து குடியேறிய ஆதி அறபு மக்களும் இதே ஹலீபாவின் ஆட்சியில் ஹாஸிமியர்களுக்கு இழைக்

கப்பெற்ற கொடுமைகளுக்கு அஞ்சி நாடு துறந்தவர்களேயாவர். அறபு நாட்டின் இருப்பிடத்தைக் கவனிக்கும்போது, அந்நாட்டு மக்களுக்கு இந்து மகா சமுத்திரத்தின் ஒரு பாரிசத்திலுள்ள தென்இந்திய, இலங்கைக் கரைப்பகுதிகளும் சம அளவிற் பழக்கமுடையனவாக இருந்திருக்குமென்பது புலப்படும். இதனைக்கொண்டு ஸ்வாஹிலிக்கும் அறபுத் தமிழுக்குமுள்ள அன்புத்தளையை ஊகிக்கலாம். ஸ்வாஹிலி மக்களினதும் சோனக மக்களினதும் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றில் மிகுந்த ஒற்றுமைகள் காணப்படுதலையும் காணலாம். இரு வகுப்பாரும் ஷாபிகளாக இருப்பதும் குறிப்படத்தக்கதாகும். இத்துறையில் ஆராய விழையும் எவரும் அறபு, இங்கிலிஸ், தமிழ், ஸ்வாஹிலி ஆகிய நான்கு மொழிகளாவது தெரிந்தவராயிருத்தல் அவசியம். நம்மிடையே ஓர் அல் பைறூனி உளரேல்...?

அபூ றைஹான் முஹம்மத் பின் அஹ்மத் அல் பைறுனி என்பவர் வடஇந்தியாவை ஆண்ட சுல்தான் மஹ்மூத் கஸ்னவியின் அபிமானத்துக்கு உரியவராக விளங்கினார். 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் சமஸ்கிருத மொழியைத் துறை போகக் கற்று, இந்து மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றி வெகு நுணுக்கமாக ஆராய்ந்து, கித்தாபுல் ஹிந்த - இந்திய வைபவ நூல் - என்ற நூலினை இயற்றினார். அறிவியல் முறை வழுவாது நுணுக்கமான முறையில் அவர் ஆக்கிய அந்நூலை இன்றைய வரலாற்றாசிரியர்களும் சமூகவியலாளர்களும் வியந்து போற்றுகிறார்கள்.

ஆகஸ்ட் 30ஆந் திகதி அமீர் அவர்களுடன் ஸ்வாஹிலிப் பாடசாலைகள் சிலவற்றைப் பார்க்கச் சென்றேன். அவர் என் வசதிக்காக அப்பகுதி லெவாலி - தாறுஸ்ஸலாத்து அறபு மக்களின் தலையாரி -அவர்களையும் அழைத்து வந்திருந்தார். பாடசாலைகளைச் சுற்றிப் பார்வையிட்ட சமயத்தில் பழக்க வழக்கங்களில் இலங்கை முஸ்லிம்களும் ஸ்வாஹிலி முஸ்லிம்களும் எவ்வளவு தூரம் நெருக்கமான தொடர்புகள் உடையவர்கள் என்பதைக் கவனிக்க முடிந்தது. குர்ஆன் பள்ளிக்கூடம் போன்ற மார்க்கப் பாடசாலை ஒன்றினைப் பார்க்கப் போனோம். நாங்கள் போய்ச் சேர்ந்த சமயத்தில் சிறுவர்கள் எல்லோரும் உச்ச ஸ்தாயியில் ஆளுக்கொரு பாடத்தை மனனஞ் செய்து கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டதும் யாழ்ப்பாணத்தில் என் சிறுபிராயத்தில் கல்வி கற்ற அல்லாபிச்சை மாமாவுடைய பள்ளிக்கூடம் மனதிற் பளிச்சிட்டது. இங்கிருந்து அரசினர் ஆபிரிக்க மகளிர் பாடசாலைக்குச் சென்றோம். இங்கு 5 ஆம் வகுப்பிலிருந்து ஸ்வாஹிலியும் இங்கிலிஸும் படிப்பிக்கப்படுவதாகத் தெரிய வந்தது. 8 ஆம் வகுப்பிலிருந்து இங்கிலிஸே போதனா மொழி.

பாடசாலைகளைச் சுற்றிப் பார்த்து முடிந்ததும், தாறுஸ்ஸலாம் கலாசார மன்றத்தின் ஆதரவில் ஏற்பாடாகியிருந்த கூட்டத்திற்குச் சென்றோம். இங்கு இலங்கையின் கல்வி முறைபற்றி நான் பேசினேன். எனது சகாவும் கனேடியப் பிரதிநிதியுமான பெயர்வெதர் அவர்கள் ''கனடாவில் அமெரிக்கச் செல்வாக்கு'' என்ற பொருள் பற்றி உரையாற்றினார். இந்தக் கூட்டத்துக்குக் கல்வி இலாகா அதிபர் திரு. எலிஸன் அவர்களும் வந்திருந்தார். இவர் கூட்ட முடிவில் என்னுடன் உரையாடிய போது எனது பேச்சில் குறிப்பிட்ட விஷயங்கள் பற்றிப் பல கேள்விகள் கேட்டார்.

- கிழக்காபிரிக்கக் காட்சிகள் ப: 150- 156

- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் ப: 36 - 38

## இணைப்பு

# புகழ்ப்பாவணி

யாழ்ப்பாணம் சு.மு. அசனாலெப்பை ஆலிம் புலவரால் பாடப்பட்டது. 'புகழ்ப் பாவணி' என்பதாகும். 1890 இல் முதல் வெளியீட்டினைக் கண்ட இந்நூல் 1991 ஆம் ஆண்டு மீள்பிரசுரம் செய்யப்பட்டது இம்மீள் பிரசுரத் தினைச் செய்தவர் பேராசிரியர் அல்லாமா ம. முகம்மது உவைஸ் அவர் களாவார்.

இந்நூல் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது: நவரத்தினத் திருப் புகழ், சப்தரத்தினத் திருப்புகழ், பஞ்சமணித் திருப்புகழ், முகையதீன் ஆண்டகை பேரில் ஆசிரிய விருத்தம், பதாயிகுப் பதிற்றுத் திருக்கந்தாதி, மற்றும் சாகுல் ஹமீது ஆண்டகையவர்கள் பேரில் முனாஜாத்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பேரிலான புகழ்ப்பாடல்களே திருப் புகழ் என இஸ்லாமியத் தமிழிலக்கியத்தில் வழங்கி வருகின்றன.

முனாஜாத் என்பது முஸ்லிம்களின் மூலமாகத் தமிழிலக்கியத்துக்கு வந்து சேர்ந்த பாவகையாகும். அவ்வாறு வந்து சேர்ந்த ஏனையவை படைப் போர், படை வெட்டு, மஸ்அலா, கிஸ்ஸா, நாமா என்பனவாகும்.

முனாஜாத் என்பது இறைபற்றையும், இறை உணர்வையும் வெளிப் படுத்துவதாகும். இது எப்போதும் சுருக்கமானதாகவும் இருக்கும். ஹக்குத் தஆலாவின் பெயரில் முனாஜாத், காரண முனாஜாத் என்பன இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.

படைப்போர் என்பது ஆங்கிலத்தில் War ballads என்பதற்குச் சமான மாகும். இதுவொரு வகைப் பிரபந்தமாகும். முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாதோருக்குமிடையே நடைபெற்ற போர்களைப் பற்றியவையே இவை யாகும். அதனால் இவற்றுக்கு வரலாற்றுப் பெறுமானமும் உண்டு. ஐந்து படைப்போர், இப்லீசு படைப்போர், சையிதத்துப் படைப்போர், உசைன் படைப்போர் என்பன இத்தகைய இலக்கியங்களாகும்.

இதனையொட்டியதாகப் பிறிதொரு வகைப் பாடல்களும் முஸ்லிம் களிடையே வழக்கிலிருந்துள்ளதாக அறிய வருகிறது. அது 'படைவெட்டு' என அழைக்கப்பட்டுள்ளது. அந்திரயவனனின் படைவெட்டு, காசிம் படை வெட்டு, மலுக்கு முலுக்கு படைவெட்டு என்பன இன்னமும் பனை யோலை ஏட்டுப் பிரதிகளாகவேயுள்ளதாக ஓர் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

மஸ்அலா என்றால் வினா அல்லது பிரச்சினை எனப் பொருள்படும். இஸ்லாமிய அடிப்படையிலான வினாக்களைக் கேட்டு அதற்கான விடை களைக் கூறுவதே மஸ்அலாவாகும். நூறு மஸ் அலா, ஆயிர மஸ் அலா, வெள்ளாட்டி மஸ் அலா என்பனவுண்டு.

கிஸ்ஸா என்றால் கதை என்பதாகும். அறபுநாட்டு வரலாறு, சமூகம் , சமயநிலை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே அநேக கிஸ்ஸாக்கள் பாடப்பட்டுள்ளன. சைத்தூன் கிஸ்ஸா, முகம்மதன் கிஸ்ஸா, யூஸுப் நபி கிஸ்ஸா என்பன பிரபலமானவையாகும்.

நாமா என்பது தொடர் வரலாறாகும். 'நாமே' எனும் பாரசீகச் சொல்லி ருந்து மருவி வந்ததே இதுவாகும். மிஃறாஜ் நாமா, நூறு நாமா என்பன உதாரணங்களாகும்.

அசனாலெப்பைப் புலவரின் நவரத்தினத் திருப்புகழை உள்ளடக்கிய புகழ்ப் பாவணியைப் பதிப்பித்த பேராசிரியர் உவைஸ், அதன் வரலாற்றைப் பின்வருமாறு கூறுகிறார்:

''ஒரு நாள் காலஞ்சென்ற அல்ஹாஜ் எ.எம்.எ. அஸீஸ் அவர்களைச் சந்திக்க அவரது இல்லத்துக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அவர் தமது பெரிய தகப்பனார் சு.மு. அசனாலெப்பை அவர்களால் இயற்றப்பட்ட பாடல்கள் சிலவற்றைக் கொண்ட ஒரு கையேட்டுப் பிரதியை என்னிடம் தந்தார். அது அசனாலெப்பை அவர்களின் கையெழுத்துப் பிரதியின் நிழற்பட நேர்படி உருவம். அந்தக் கையெழுத்துப் பிரதியில் திருப்புகழ்ப்பாடல்கள் இடம் பெற்றிருந்தன. ஒன்று, சப்த ரத்தினத் திருப்புகழ். மற்றது பஞ்ச மணித் திருப்புகழ். முன்னையது ஏழு திருப்புகழ்ப் பாடல்களைக் கொண்டது. பின்னையது ஐந்து திருப்புகழ்ப் பாடல்களைக் கொண்டது.

புகழ்ப் பாவணியின் இந்தப் புதிய பதிப்பில் நவரத்தினத் திருப்புகழ், சப்தரத்தினத் திருப்புகழ், பஞ்சமணித் திருப்புகழ் என்னும் மூன்றும் இடம் பெறுகின்றன. அத்தோடு புகழ்ப்பாவணியின் முதற்பதிப்பில் வெளியான வேறுசில பாடல்களும் புதிய பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. புகழ்ப் பாவணியின் முதற் பதிப்பிலும் திருப்புகழ்ப் பாடல்களைக் கொண்ட கையேட்டுப் பிரதியிலும் இடம்பெறாத சந்தக் குழிப்புக்கள் புதிய பதிப்பில் பாடல்களை அறிமுகப்படுத்துமுகமாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்

பாலானவை காசீம் புலவரின் திருப்புகழில் இடம்பெற்றுள்ள சந்தக் குழிப் புக்களை ஒத்திருக்கின்றன.'' என்கிறார் பேராசிரியர் உவைஸ்.

அசனாலெப்பைப் புலவரின் பாடல்களை நோக்கும் பொழுது அவரது ஆழ்ந்த மொழியறிவும், இசைப் புலமையும் புலப்படுகின்றன. ஏனெனில் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடுதல் மிகவும் கடினமான காரியமாகும். இங்கு வடிவத்துக்குக் கட்டுப்பாடு அதிகம் உண்டு. ஒரு பாடலின் முதலடியிலுள்ள சந்தக் குழிப்பு எல்லா அடிகளிலும் வரவேண்டும். பாடல்களில் அமையும் வண்ணங்களும் அத்தகையனவே. ஆழ்ந்த இசைப் புலமையும் நுண்மையான தாளத்திறனும் பரந்த சொல்லாட்சியும் திருப்புகழ்பாடும் புலவருக்கு இன்றி யமையாதனவாகும்.

இவ்வகையான திருப்புகழ் பாடப்படும் சந்தக் குழிப்புக்கள் அவற்றின் எழுத்துக்களின் எண்ணிக்கைக்கு அமையப் பல்வேறு வகைப்படும். அடிப் படைச் சந்தங்களைப் பார்க்கும்பொழுது இரண்டு எழுத்து அளவுடைய தன என்பதும், மூன்று எழுத்து அளவுடைய தனன என்பதும் திசிரம் எனப்படும். நான்கு எழுத்தளபுடைய தன தன சதுரம் எனப்படும். தன தனன என ஐந்து எழுத்தளபுடையவை கண்டம் எனப்படும். ஏழு எழுத்து அளபுடைய தனன தன தன என்பது மிசிரம் எனப்படும். ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட அளபுடைய தன தன தன தனன என்பது சங்கீர்ணம் எனப்படும். இச் சந்தக் குழிப்புக்களுக்கேற்பப் பாடலை அமைப்பதென்பது இலகுவான காரியமல்ல. இக்கஷ்டமான காரியத்தை மிக அழகாகச் செய்திருக்கிறார் அசனாலெப்பை புலவர். நவரத்தினத் திருப்புகழிலுள்ள பாடலொன்றை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

*அடரு மணலிய திரியினு மிரியினு*
*முதக வியல்பது சறுகினு மறுகினு*
*மனலி னுறுகுண மிகலினு மகலினும் - விசைமேவு*

*மரிய வளிமுறை வழுவினு நழுவினு*
*நிவரு மலைநிலை யதறினு முதறினு*
*மகில மிசைதொடர் குலையினு மலையினு - மலையாதி*

*யிடைகொ ளெழுகடல் புரளினும் வரளினு*
*மொளிரு முடுவின முதிரினு மதிரினு*
*மினிய செழுமதி தளரினு முளரினு -மகன்மேல்பா*

*லிரவி யுதயம தியலினு முயலினு*
*மனது குணதிசை படியினு மடியினு*
*மிணையில் கதிர்முனை குவியினு மவியினும் - விரிநீர்மை*

*யுடைய ககன்முக டிடியினு மொடியினு*
*மவனி யொடுககன் விரவினு நிரவினு*
*முயிர்கண் முழுமையு மழியினு மொழியினு -மொருபோது*

*முலக முழுவது மறிதக வெறிதக*
*நெகிழ நபியென விறைதரு மறைதரு*
*முவமை தவிர்பெயர் மறைதலில் குறைதலில் - மகுமூதே*

*மடமை குடிகொளு மிடிமைய னடிமையன்*
*மனதி லிதன்மிசை திணமது குணமது*
*வளர விருவிழி பொழிதரும் விழிதரு -மளிதாரீர்*

*மதுவி னதியுட னெருமைகொள் பெருமைகொள்*
*முலைகொள் பயநதி விசைகொளு மிசைகொளு*
*மதின நகர்வயின் வதிதரு மதிதரு -மிறசூலே*

இப்பாடலில் வரும் திரியினு மிரியினு, சறுகினு, மறுகினு, மிகலினு, மகலினு, வழுவினு நழுவினு, அதறினு முதறினு, குலையினு மலையினு, புரளினு வரளினு, உதிரினு மதிரினு, தளரினு முளரினு, இயலினு முயலினு, படியினு மடியினு, குவியினு, மவியினு, இடியினு மொடியினு, விரவினு நிரவினு, அழியினு மொழியினு, அறிதக வெறிதக, இறைதரு மறைதரு, மறைதலில் குறைதலில், மிடிமையன் அடிமையன், திணமது குணமது, பொழிதரும் விழிதரும், எருமை கொள் பெருமை கொள், இசை கொளு மிசைகொளு, வதிதரு மதிதரு எனும் சொல்லாட்சிகள் கைதேர்ந்த ஓர் அறிஞனாலும் புலவனாலும் மட்டுமே கையாளப்பட முடியும். அந்த ரீதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத்து அசனாலெப்பைப் புலவரின் புகழ்ப் பாவணி சிறப்புற்று விளங்குவதைக் காணலாம்.

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில்
2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் திகதி
எஸ். எச். எம். ஜெமீல் ஆற்றிய உரை

- Collected Speeches ,Writings, and Reviews of S.H.M. Jameel
Vol-5- 2001, p: 181 - 184



1947: எ.எம்.எ. அஸீஸின் முயற்சியினால், இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தின் மூலம் எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலுள்ள அல் அஸ்ஹர் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற நான்கு மாணவர்களும் அப்பல்கலைக்கழக முதல்வர் ஷெய்க் முஸ்தபா அப்துல் றஸாக் மற்றும் அஸீஸுடன் எடுத்துக் கொண்ட படம். மௌலவிகளான ஏ. முஹம்மத் அலவி, ஏ. எச். எம். ஹுசைன், யூ. ஏ. உபைதுஸ் ஸத்தார், ஏ.ஆர்.எம். சுபைர் ஆகியோரே அம்மாணவர்களாவர்.



அஸீஸின் தூண்டுதலால் இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் எம்.எம். உவைஸ் மற்றும் ஸாஹிறாக் கல்லூரி மாணவனாயிருந்து பிற்காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளராயுயர்ந்த வீ.ஏ. கபூர் ஆகி யோர் அஸீஸுடன் காணப்படுகின்றனர்.



1955: தென்னிந்திய முஸ்லிம் கல்விக் கழகத்தின் பொன்விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் தலைமையுரை நிகழ்த்துகிறார்.




1954: கென்யாவின் தலைநகரான நைரோபியிலுள்ள ஆகாகான் பாடசாலைக்கு விஜயம்



1954: கென்யாவின் மொம்பாஸா நகரிலுள்ள முஸ்லிம் பாடசாலையொன்றுக்கு விஜயம்



கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் அஸீஸ் தலைமையில் நடைபெற்ற பாரதி விழாவில், பண்டிதர் கே. லட்சுமண ஐயர் சொற்பொழிவாற்றுகிறார். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை மேடையில் அமர்ந்திருக்கிறார்.



1959: அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி இக்பால் மண்டபத்தில் நடத்திய மகாநாடொன்றில் பாகிஸ்தானைச் சேர்ந்த கலாநிதி மஹ்மூத் ஹஸன் தலைமையுரை நிகழ்த்துகிறார். கலாநிதி ரி.பி. ஜாயா, எ.எம்.எ. அஸீஸ்; பாகிஸ்தான் தூதுவர் ஹமீத் ஹுசைன் மற்றும் பிரமுகர்கள் அமர்ந்திருக்கின்றனர்.



1960: ஸன்ஸிபாரிலிருந்து வருகைதந்திருந்த கல்விமான் ஒருவர் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி நூலகத்துக்கு விஜயம். இக்கல்லூரியிற் கற்றுக் கொண்டிருந்த கென்யா தேசத்து மாணவன் அப்துல்லா சலீம் மற்றும் நூலகர் எம்.எல்.எம். பாறுக் ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர்.

## Dr. A.M.A. Azeez Foundation
## Members of the Executive Committee

Mr. S.H.M. Jameel B.A. (Hons)., DipEd., M.A. – President

Mr. Khalid M. Farouk, J.P. – Hony. Secretary

Mr. M. Ali Azeez B.Sc., FCA. – Hony. Treasurer

Desamanya Prof. M.T.A. Furkhan FCMA, J. DipMA, FCIS, FCPA(Aust)

Mr. P. Balasingham B.A. (Cey)

Mr. M.S. Raheem J.P.

Mr. Maruthur A. Majeed B.A. (Hons), DipEd, SLEAS

Mr. K.N. Deen, National President, All Ceylon Y.M.M.A. Conference

## Dr. A.M.A. Azeez Foundation

## List of Publications

| | | |
|---|---|---|
| 2007 | : | A.M.A. Azeez – A PROFILE |
| 2008 | : | A.M.A. Azeez – SENATE SPEECHES |
| 2009 | : | A.M.A. Azeez – MUSLIM EDUCATION IN SRILANKA |
| 2009 | : | அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் - பன்முகப்பார்வை |
| 2010 | : | ඒ.එම්.ඒ. අසීස් - චරිත සටහනක් |
| 2011 | : | **The West Reappraised** (Re- Published) |
| 2012 | : | அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் (விரிவாக்கிய மீள் பதிப்பு) |

விலை: ரூபா.150.00